# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 63 — 1973 ජූනි 08 වැනි සිකුරාදා — 1973.06.08

63 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு யூன் மாதம் 08 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (II அ)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. . | 519 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 528 |


**கவனிக்க.**—கடன்சபை (திருத்தம்) சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II றகு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## பதவிகள் — வெற்றிடம்

### "இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"

*1. படிகள்.*—வேறுவிதமாகச் சொல்லப்பட்டாலொழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

*2. சேவைக்குரிய நிபந்தனைகள்.*—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

*3. நியமன விதிகள்.*—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.*—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றுண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

**முக்கிய அறிவித்தல்**

இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (IIஅ) விலும் (IIஆ)விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியனைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழித்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 திருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றேவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

### கொழும்பு மாவட்டத்தின் கொழும்பு (பொறலை) பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

பொறலை பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள், அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொது மக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள், ஆண், பெண் இரு பாலாரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதிற்கு குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக்கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும், ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும். காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராம சேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதி மன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், இந்த பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும், காரியாலயங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கப்பட்டிருக்கும் அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்ப பத்திரத்தில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 13 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

எம். பீ. திலருயக்க,
மேலதிக மாவட்ட பதிவாளர்.

கொழும்பு மாவட்ட பதிவாளர் அலுவலகம்,
1973 ம் ஆண்டு மே மாதம் 30 ம் திகதி.

6–177 —08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 68

---

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

#### சுரங்கப் பரிசோதகர் பதவி

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள சுரங்கப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு "செயலாளர், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2," என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 9 ஜூலை 1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16 ஜூலை 1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக்கூறும் முறைப்பாடு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்கு கடைசித் திகதி வரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விண்ணப்பப் படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள ஸ்ரீ லங்கா குடியரசின் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iii) மருத்துவச் சோதனையும் பயணச் செலவும் : ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா குடியரசு உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் ஸ்ரீ லங்காவுக்குப் பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தே கொடுத்தல் வேண்டும்.

2. **தொழில் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமிக்கப்படுபவர் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்தவேண்டும். 3 வருடகாலத் தகுதிகாண் அடிப்படையிலேயே நியமனம் செய்யப்படும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் நியமனத்திற்குப் பின்னர் பூகற்ப ஆராய்ச்சி அதிபர் வேண்டியபடி ஸ்ரீ லங்காவிலும், வெளிநாட்டிலும் சுரங்கப்பகுதியில் பயிற்சி நெறியொன்றை மேற்கொள்ள வேண்டப்படலாம். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பிற நாட்டில் பயிற்சி நெறி ஒன்றை மேற்கொள்ள நேரிட்டால் ஸ்ரீ லங்கா குடியரசுடன் ஓர் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவார் (ஏற்கெனவே அரச சேவையில் இல்லாதோர் இரு பிணை நிற்போருடன் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவர்). அத்துடன் பின்வருவனவற்றை மேற்கொள்ளப்படுவோராவார் :—

(அ) அதில், மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அவர் ஊக்கமாகவும், விசுவாசமாகவும் தனக்கு விதிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றி திருப்திகரமாக நிறைவேற்றியதன் பின்பு, வேண்டிக்கொள்ளப்படின் ஸ்ரீ லங்கா குடியரசிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு (அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும்) கடமையாற்றுவதாயும்,

(ஆ) இந்த உடன்படிக்கை அல்லது பிணை நிபந்தனைகளுக்கு அமைய நடக்கத் தவறினல் ஸ்ரீ லங்கா குடியரசால் அல்லது பயிற்சியளிக்க முன்வந்த ஸ்தாபனத்தால் குறித்த பயிற்சி நெறி சம்பந்தமாகப் பொறுக்கப்பட்ட செலவுகளை அதாவது சம்பளம், படிகள், போக்குவரத்துச் செலவு, ஏனையவைகள் ஸ்ரீ லங்கா குடியரசிற்கு மீளளிப்பதாயும் உடன்படிக்கை செய்ய வேண்டியவராவர்.

குறிப்பு.—இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியிலுள்ள ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர் புதிய பதவியில் முதல் ஒரு வருட காலத்திற்கு பதில் கடமையாளராக நியமிக்கப்படுவார்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—நியமனத்திற்குரிய திரட்டிய சம்பள அளவுத்திட்டம் கீழ்க்கண்டவாறு : வருடத்திற்கு ரூ. 7,800 ல் ஆரம்பமாகி ரூ. 360 கொண்ட 9 வருட உயர்வுகளாலும் ரூ. 480 கொண்ட 11 வருட உயர்வுகளாலும் ரூ. 16,320 வரை உயரும். வருடச்சம்பளம் ரூ. 9,960 க்கும், ரூ. 13,920 க்கும் முன் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

(இது 69.10.01 க்கு முன் இருந்த ரூ. 5,160—360/480—13,200 அடிப்படைச் சம்பள அளவுத்திட்டமாகும்)

குறிப்பு.—வருடச் சம்பளம்—ரூபா 13,920 க்கு மேல் செல்வதற்கு பூரண தொழிற் தகைமை பெறுதல் வேண்டும். ரூ. 9,960 க்கு முன் வினைத்திறமை காண் தடையை தாண்டுவது அதற்குரிய தடைப் பரீட்சையில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியாகவோ அல்லது பதிவினலோ ஸ்ரீ லங்கா பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) 9 ஜுலை 1973 ல் 20 வயதிற்குட்படாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றி கவனிக்கப்படும்).

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சுரங்கப் பொறியியலாளர் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப் பாடசாலையொன்றில் கூட்டுப் பரிசில் பட்டம், அல்லது அதற்கு சமமான தகைமையும் இரண்டு வருட சுரங்க அனுபவமும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம் :**—சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது).

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த பட்டம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமையும் அல்லது தொழில் நுட்பத் தகைமையும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

(2) சாதனங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

7. அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

8. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், செயலாளர், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக் கூடாது.

9. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

செயலாளர்,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு.

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
30, மே 1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்

சுரங்கப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

**முக்கிய குறிப்பு.**—விண்ணப்பப்பத்திரம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "சுரங்கப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் செயலாளர், கைத்தொழிழ், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என்று விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

1. முழுப்பெயர் :————.

2. விலாசம் :————.

3. பிறந்த திகதியும் பிறந்த இடமும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

4. இனம் :————.

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :————.

6. கல்வி அல்லது தொழில் நுட்பத் தகைமைகள் :————.
(தாதாரப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.)

7. பாடசாலையை விட்டு விலகியபின் செய்த/அல்லது பெற்ற பயிற்சி பற்றிய விபரம் :————.

8. இதற்கு முன் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் வேலை செய்திருந்தால் அவற்றிலிருந்து விலகியதற்கான காரணங்கள் :————.

9. குற்றவியல் குற்றத்திற்காக சட்ட நீதிமன்றத்தில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டிருந்தால் குற்றம் பற்றிய விபரங்களையும், பெற்ற தண்டனைகளையும் தருக :————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் தரும் மூவருடைய பெயர்கள், பதவிகள் என்பவற்றைக் குறிப்பிடுக :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

6-265—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

### பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களம்

### உதவிச் சுரங்கப் பரிசோதகர் பதவி

பூகற்ப ஆராய்ச்சித் திணைக்களத்திலுள்ள உதவிச் சுரங்கப் பரிசோதகர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இவ்விளம்பரத்தின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமையத் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கைத்தொழி, விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

(அ) உள்நாட்டு விண்ணப்பங்கள் : 9 ஜூலை 1973.
(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள் : 16 ஜூலை 1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப்படிவமோ அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதமோ அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறும் முறைப்பாடு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்புவதற்குக் கடைசித் திகதிவரை பொறுத்திருப்பவர்கள் அதனால் ஆகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் விண்ணப்பப்படிவங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள் அவர்கள் வசிக்கும் நாட்டிற்குரிய அல்லது அந்நாட்டிற்கு மிகக் கிட்டவுள்ள ஸ்ரீ லங்கா குடியரசின் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு கைத்தொழில, விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு அனுப்பலாம்.

(iii) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டில் தெரிவு செய்யப்பட்ட ஸ்ரீ லங்கா குடியரசு உத்தியோகத்தர்கள் சேவைக்குத் தகுதியான உடல்நலமுடையவர்களாக இருக்கிறார்களா என்பதை உறுதிப்படுத்துவதற்கான மருத்துவச் சோதனை செய்யும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் ஸ்ரீ லங்காவுக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **தொழில் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானது. நியமிக்கப்படுபவர் அரசாங்க சேவை சகாய நிதிக்கு உதவுதொகை செலுத்த வேண்டும். நியமனம் 3 வருடத்தைத் தகுதிகாண் காலமாக உடையதாகும்.

தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர் நியமனத்திற்குப் பின்னர் பூகற்ப ஆராய்ச்சி அதிபர் வேண்டியபடி ஸ்ரீ லங்காவிலும் வெளிநாட்டிலும் சுரங்கப் பகுதியில் பயிற்சி நெறியொன்றை மேற்கொள்ள வேண்டப்படலாம். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர் பிறநாட்டில் பயிற்சிநெறி ஒன்றை மேற்கொள்ள நேரிட்டால் அவர் ஸ்ரீ லங்கா குடியரசுடன் ஓர் உடன்படிக்கை செய்யக் கேட்கப்படுவார் (ஏற்கெனவே அரச உத்தியோகத்தராக இல்லாதோர் இரு பிணை நிற்போருடன் உடன்படிக்கை செய்யக்கேட்கப்படுவர்). அத்துடன் பின்வருவனவற்றை மேற்கொள்ளப்படுவோராவார் :—

(அ) அதில், மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அவர் ஊக்கமாகவும், விசுவாசமாகவும் தனக்கு விதிக்கப்பட்ட பயிற்சி நெறியைப் பின்பற்றி திருப்திகரமாக நிறைவேற்றியதன் பின்பு, வேண்டிக்கொள்ளப்படின் ஸ்ரீ லங்கா குடிரசுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு (குடியரசால் நிர்ணயிக்கப்படும்) கடமையாற்றுவதாயும்,

(ஆ) இந்த உடன்படிக்கை அல்லது பிணை நிபந்தனைகளுக்கு அமைய நடக்கத் தவறினால் ஸ்ரீ லங்கா குடியரசால் அல்லது பயிற்சியளிக்க முன்வந்த ஸ்தாபனத்தால் குறித்த பயிற்சிநெறி சம்பந்தமாகப் பொறுக்கப்பட்ட செலவுகளை அதாவது சம்பளம், படிகள், போக்குவரத்துச் செலவு, ஏனையவைகள் ஸ்ரீ லங்கா குடியரசுக்கு மீளளிப்பதாயும் உடன்படிக்கை செய்ய வேண்டியவராவர்.

குறிப்பு.—இனைப்பற்றுச் சம்பளம் பெறும் பதவியிலுள்ள ஒருவர் தெரிந்தெடுக்கப்பட்டால் அவர் புதிய பதவியில் முதல் ஒரு வருட காலத்திற்குப் பதில் கடமையாளராக நியமிக்கப்படுவார்.

3. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய சம்பள அளவு பின்வருமாறு : வருடம் ரூபா 6,720 ல் ஆரம்பமாகி வருடம் ரூபா 360 ஐக் கொண்ட 12 வருட ஏற்றங்களால் ரூபா 11,040 வரை உயரும். தெரிவு நடைபெறும் நேரத்தில் அபேட்சகர் எந்திரவியலில் பட்டக் கல்விப்பட்டம் பெற்றிருந்தால் ஆரம்பச் சம்பளமாக வருடம் ரூபா 7,800 ல் நியமிக்கப்படுவார். (இந்த புதிய திரட்டப்பட்ட சம்பள அளவு 1.10.69 க்கு முன்பு இருந்த அடிப்படைச் சம்பள அளவுத்திட்டம் 4,080—12/360—8,400 க்குச் சமமானதாகும்.)

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான **சான்று காட்டுதல் வேண்டும் :—**

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடநலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வம்சாவழியாகவோ அல்லது பதிவினாலோ ஸ்ரீ லங்கா பிரசையாக இருத்தல் வேண்டும்.

(இ) 9 ஜூலை 1973 ல் 22 வயதுக்குட்படாமலும் 30 க்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கெனவே அரச சேவையில் உள்ளவர்களிடமிருந்து பெறும் விண்ணப்பங்கள் வயதுக்கட்டுப்பாடு வேற்றுமையின்றிக் கவனிக்கப்படும்.)

(ஈ) (i) பிரித்தானிய பல்கலைக்கழகத்திலோ அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலோ சுரங்கவியலில் விஞ்ஞானப்பட்டதாரிப் பட்டம் அல்லது தகுதிகாண் தேர்வுப் பரீட்சைப் பத்திரம் (டிப்பிளோமா) அல்லது அங்கீகரிக்கப்பட்ட சுரங்கவியல் பாடசாலையொன்றில் கூட்டுப்பரிசில் பட்டமும் சுரங்க அனுபவமும் அல்லது

(ii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் எந்திரவியலில் பட்டதாரிப் பட்டம் அல்லது சமமான தராதரம், அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் கணிதம், பௌதீகம், இரசாயனம் ஆகியவற்றுடன் விஞ்ஞானப்பட்டதாரிப் (பொது) பட்டம்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**முக்கியம் :**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது.)

(ஆ) பல்கலைக்கழகப் பட்டம் அல்லது மிக உயர்ந்த பட்டம்.

(இ) குணச்சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாக இருத்தல் வேண்டும்.

(ஈ) உயர்தொழிற் தகைமையும் அல்லது தொழில் நுட்பத் தகைமையும்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) சாதனங்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படவேண்டும்.

(2) சாதனங்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத்தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டாது.

6. அரச சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். எனினும் அவர்கள் தம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல் விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், செயலாளர், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத் திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. எல்லா விண்ணப்பப்பத்திரங்களும் கிடைத்ததாக அறிவிக்கப்படும். விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியிலிருந்து மூன்று நாட்களுக்குள் விண்ணப்பப்பத்திரம் கிடைக்கப்பட்டதாக அறிவித்தல் ஏதும் பெற்றுக்கொள்ளாவிடின் கைத்தொழில், விஞ்ஞான அலுவல் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்க வேண்டும். இதைத்தவற விட்டால் விண்ணப்பதாரி பற்றி கவனத்துக்கு எடுத்துக்கொள்வது சம்பந்தமாக அவருக்கு இருக்கும் உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு.

கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு,
48, ஸ்ரீ ஜினரத்தின வீதி,
கொழும்பு 2,
30 மே 1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்

உதவிச் சுரங்கப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பப் பத்திரம்

முக்கிய குறிப்பு :—விண்ணப்பப் பத்திரம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "உதவிச் சுரங்கப் பரிசோதகர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு பதிவுத் தபாலில் செயலாளர், கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் அமைச்சு, 48, ஸ்ரீ ஜினரத்தின வீதி, கொழும்பு 2 என்று விலாசமிட்டு அனுப்புதல் வேண்டும்.

1. முழுப்பெயர் :————.

2. விலாசம் :————.

3. பிறந்த திகதியும், பிறந்த இடமும் :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்பட வேண்டும்.)

4. இனம் :————.

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? :————.

6. கல்வி அல்லது தொழில் நுட்பத் தகைமைகள் :————.
(தராதரப் பத்திரப் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்.)

7. பாடசாலையை விட்டு விலகியபின் செய்த/அல்லது பெற்ற பயிற்சி பற்றிய விபரம் :————.

8. இதற்கு முன் அரசாங்கத் திணைக்களத்தில் அல்லது கூட்டுத் தாபனத்தில் வேலை செய்திருந்தால் அவற்றிலிருந்து விலகியதற்கான காரணங்கள் :————.

9. குற்றவியல் குற்றத்திற்காக சட்ட நீதி மன்றத்தில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டிருந்தால் குற்றம் பற்றிய விபரங்களையும், பெற்ற தண்டனைகளையும் தருக :————.

10. நற்சாட்சிப் பத்திரங்கள் தரும் மூவருடைய பெயர்கள், பதவிகள் என்பவற்றைக் குறிப்பிடுக :————.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

6–264—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

### இலங்கை வங்கி

பதவிநிலை உதவியாளர் பதவிகள் வகுப்பு I

வங்கியின் சேவையில் பதவிநிலை உதவியாளர் வகுப்பு I பதவிகளுக்காகிய விண்ணப்பங்கள் கேட்கப்படுகின்றன. முகாமையாளர், ஆளணி பகுதி, இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், யோர்க் வீதி, கொழும்பு 1 என்னும் முகவரியில் பெற்றுக்கொள்ளப்படக்கூடிய பத்திரங்களிலான விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 30.6.1973 ல் அல்லது அதற்கு முன்பாக அவரை சேர்தல் வேண்டும்.

விண்ணப்பப் பத்திரங்களை தபாலில் பெறவிரும்புவோர் தமது முகவரியிடப்பட்ட முத்திரையிட்ட (9" × 4") அளவினதான தபாலுறைகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

1. தகவுடமை.—விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் அவர்/அவள்—

(அ) இலங்கைப் பிரசை என்பதற்கும் ;

(ஆ) 30.6.1973 ல் 26 வயதிற்கு குறைந்தவர் என்பதற்கும் திருப்திகரமான அத்தாட்சி தருவிக்க வேண்டும் ;

(இ) நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கமத்தொழிலில் பட்டம் பெற்றவராகவும்

அல்லது

நன்கு மதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் தாவரவியல் அல்லது விலங்கியல் அல்லது இரசாயனவியலைப் பாடமாக்கிக்கொண்டு பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிங்களம் அல்லது தமிழ் மொழியில் மிக்க தரமுடைய தேர்ச்சியுடையவராக இருத்தல் வேண்டும்.

2. சம்பளமும் படிகளும்

(அ) தகுதிகாண் நிலையில், பதவிநிலை உதவியாளர் வகுப்பு I க்கு மாதாந்தம் ரூ. 325 செலுத்தப்படும்.

(ஆ) கீழுற்ற 4 (ஈ) யின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தபின் பின்வரும் அளவுத் திட்டத்தில் ரூ. 400 சம்பள நிலையில் வைக்கப்படுவர்.

ரூபா 375 தொடக்கம் ரூபா 965 வரை

$3 \times 25,\ 1 \times 35,\ 8 \times 30,\ 6 \times 40$

வினைத்திறமைகாண் தடை ரூ. 605 இலும் ரூ. 805 இலும்.

(இ) இலங்கை வங்கியின் ஒழுங்கு விதிகளுக்கமைய வாழ்க்கைச் செலவுப்படி பெறுவர்.

குறிப்பு.—(1) பதவிநிலை உதவியாளர் வகுப்பு I பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர் ரூபா 325 சம்பள அடிப்படையில் பயிற்சிக் காலத்தின்போது ஊதியமளிக்கப்படுவர். இப்பயிற்சிக்காலம் 3 வருடங்களுக்குக் குறையாததாக இருக்கும். வங்கியின் ஒழுங்குவிதிகளின்படி ரூபா 605, ரூ 805 ஆகிய இரு சம்பள நிலைகளில் இரண்டு வினைத்திறமைகாண் தடைகளைத் தாண்டவேண்டும். ரூபா 605 சம்பள நிலையில் முதல் வினைத்திறமைகாண் தடையைத் தாண்டுவதற்கு (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் 2 பகுதிகளிலும் அல்லது (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியெய்துவதுடன் கருமப் பரீட்சையிலும் சித்தியெய்தி முதற்தர வேலைத்திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும். இரண்டாவது வினைத்திறமை காண் தடையைத் தாண்டி மாதம் ரூபா 805 பெறுவதற்கு மேலும் ஒரு கருமப் பரீட்சையில் சித்தியெய்தல் வேண்டும்.

3. பிணை.—தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர் ஒன்றில் ரொக்கமாக அல்லது பற்றுறுதி பிணைப்பாக அல்லது இவை இரண்டின் இணைப்பாக 10,000 ரூபா வரை அவர்களது கடமைகளை செவ்வையாகவும் நம்பிக்கையாகவும் செயலாற்றுவதற்கு அடைமானமாக செலுத்த வேண்டப்படுவர்.

4. சேவை நிபந்தனைகள்.—தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பகாரர்—

(அ) நியமிப்புக்கு முன்னதாக வைத்திய பரீட்சைக்கு ஆளாகிச் சித்தியெய்த வேண்டும்.

(ஆ) மூன்று வருடங்களுக்கு குறையாத தகுதிகாண் நிலையில் கடமையாற்ற வேண்டும். இக்காலத்திற்குள் அரசகரும மொழியில் III ஆம் தர நிலையில் ஓர் தேர்வுப் பரீட்சையில் சித்திபெற வேண்டும். எனினும் சிலருடைய தகுதிகாண் எல்லையை மேலும் ஒரு ஆண்டுக்கு விசேட காரணங்களுக்காக வங்கியின் செயலாட்சிக்குழு தமது விரிப்புரிமையின் மேல் நீடிக்கலாம்.

(இ) தகுதிகாண் காலத்துள் (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையின் I வது பகுதியில் அல்லது அதற்குச் சமமான (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியெய்தவேண்டும்.

(ஈ) மேற்கூறப்பட்ட சம்பள நிலையில் வைப்பதற்கு சேவையில் சேர்ந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகி இருத்தல் வேண்டும் அல்லது அரச கரும மொழியில் III ஆம் தர நிலையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் (இதில் எது பிந்தியதோ) அத்துடன் (இலண்டன்) வங்கியாளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் அல்லது (இலங்கை) வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்படும் இதையொத்த உள்ளூர் பரீட்சையில் I வது பகுதியில் சித்தியெய்தி அத்துடன் முதற்தர வேலைத்திறன் உடையவராயும் இருத்தல் வேண்டும்.

(உ) மேற்கூறிய 4 ஆம் வாசகத்தின் (ஆ), (இ) என்பவற்றில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளைத் திருப்திப்படுத்தும் திகதியிலிருந்தே குறித்த பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்.

(ஊ) மேலும் சேவையில் ஐந்தாம் ஆண்டு பூர்த்தி செய்யுமுன்பாக, நான்காம் ஆண்டு முடிவுறும்போது பெறும் சம்பள ஏற்றத்திற்கு மேம்பட்டு சம்பள ஏற்றம் பெறுவதற்கு வங்கியினால் அல்லது அதன் சார்பில் நடாத்தப்படும் அரசகரும மொழி IV ம் படிநிலை தேர்வுப் பரீட்சையில் சித்திபெறவேண்டும்.

(எ) 1956 ம் ஆண்டின் 33 ம் இல. அரசகரும மொழிக் கொள்கையை செயற்படுத்துவதற்கு தற்போதுள்ள அல்லது வருங்காலத்தில் புகுத்தக்கூடிய எந்தச் சட்டங்களுக்கும் இணங்கி ஒழுகுவாரென்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(ஏ) 1971 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 24 ம் திகதியிட்ட 42 ம் இலக்கத்தைக் கொண்ட பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரமும் அரசாங்கம் அங்கீகரித்த பணியாளர் சபை எடுத்த தீர்மானத்தின் பிரகாரமும் ஊழியர்களின் நன்மையைக் கருதி வங்கியின் ஓய்வுகால உபகாரச் சம்பளத் திட்டத்தில் சேரும்படி கேட்டுக்கொள்ளப்படுவர்.

(ஐ) 55 ஆண்டுகள் வயதில் அடைந்தவுடன் வங்கியின் சேவையிலிருந்து ஓய்வுபெறுமாறு வேண்டப்படுவர்.

5. பொது

(அ) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பத்துடன் கீழ்க்காணப் படுவனவற்றின் பிரதிகளை (மூலமல்லாத) இணைத்தல் வேண்டும்.

(1) பிறப்பின் பதிவு செய்யப்பட்ட நற்சான்று,
(குறிப்பு.—ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைப் பிரமாணங்களுக்கமைய கொடுக்கப்பட்ட பிறப்பு நற்சான்றுகள் ஏற்கப்படமாட்டாது).
(2) உயர்நிலைக் கல்வித் தகைமைகளின் நற்சான்றுகள்,
(3) விண்ணப்பகாரரின் திறமை, நடத்தை பற்றி அண்மையில் பெறப்பட்ட மூன்று நடத்தை சான்றுகள்.

(ஆ) விண்ணப்பகாரர் நேர்முகப் பரீட்சைக்கு கொழும்புக்கு அழைக்கப்படுவர். இதற்கான பிரயாணச் செலவோ வேறு செலவோ வங்கியால் வழங்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பங்கள் அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பதவிநிலை உதவியாளர் வகுப்பு I க்கு விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதவேண்டும்.

(ஈ) விண்ணப்பப் பத்திரங்கள் அல்லது விண்ணப்பங்கள் காணமற் போனதாகவோ அல்லது தபாலில் பிந்தியதாகவோ கூறப்படும் சாட்டுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. முடிவு திகதிக்கு சில நாட்களுக்கு முன் விண்ணப்பங்கள் அனுப்புபவர்கள் தாங்களே இடர்களுக்கு பொறுப்பாயிருப்பர்.

(உ) தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றுக் கொடுத்திருப்பின் அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் அவ்விண்ணப்பகாரருக்கு தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்படின் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(ஊ) விண்ணப்பகாரரை சிபாரிசு செய்யவிரும்பும் எவரும் அவ்விண்ணப்பகாரருக்கு நடத்தை சான்றுப்பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் விண்ணப்பகாரர் விடயத்தில் தலையிட்டு அவருக்கு ஆதரவுதேட முயற்சித்தால் அவ்விண்ணப்பகாரருக்கு தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(எ) தேவையான தகுதிகள் இல்லாதவர்கள் விண்ணப்பிக்க வேண்டாமென தயவாக வேண்டப்படுகின்றனர்.

எஸ். வீ. வீரசிங்க,
முகாமையாளர்,
ஆளணி பகுதி.

6-268—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

தேசிய பாற் சபை

வெற்றிடம்

**கணக்குப் பதிவியலாளர் பதவி—தரம் VI**

சபையின் சேவையிலுள்ள தரம் VI ல் உள்ள கணக்குப் பதிவியலாளர் பதவிக்கு ஸ்ரீலங்காவின் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்கள் கீழே கொடுக்கப்பட்ட படிவத்திலே உள்ளபடியே நிரப்பப்பட்டுக் கீழே கையொப்பமிட்டவருக்கு 1973.6.25 அன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும்படியாக அனுப்பப்படவேணடும்.

2. **சம்பளத்திட்டம்.**—ரூபா 355/- —14×15 2×20—ரூபா 605/- மாதாந்தம் (எல்லாம் உட்பட)

3. **தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் பின்வரும் தகுதிகள் உடையவரென அத்தாட்சிப்படுத்த வேண்டும் :—

(1) 1973.6.25 அன்று 22 வயதிற்குக் குறையாதவராயும் 30 வயதிற்குக் கூடாதவராயும் உள்ளார்.

(2) நல்லொழுக்கமும் திடகாத்திரமும் உடையவர்.

(அ) சிரேட்ட வர்த்தக மன்றத்தின் இறுதிப் பரீட்சையில் அல்லது

(ஆ) இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் வர்த்தகச் சான்றிதழ் அல்லது அதனோடொத்த பரீட்சையில் அல்லது

(இ) அரசாங்க திணைக்களத்தில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நிறுவனத்தில் ஐந்து வருட அனுபவம் உள்ளவர்.

4. **சேவை நிபந்தனைகள்.**—(அ) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவிடத்து இப்பதவியில் நியமனம் பெறுவதற்கு முன் அவர் அரசாங்கத்தில் வகிக்கும் நிலையான பதவியைத் துறத்தல் வேண்டும். அப்படியாக அரசாங்க அதிகாரத்துடன் பதவியைத் துறக்குமிடத்துச் சபையின் சேவையிற் சேரும் தருணத்தில் உபகாரச் சம்பளச் சுற்றறிக்கையின் 48 அ பிரிவிலுள்ளபடி உபகாரச் சம்பள நன்மைகள் யாவற்றையும் தொடர்ந்து வைத்திருப்பார். திணைக்கள, கூட்டுத்தாபன உத்தியோகத்தரது விண்ணப்பங்கள் யாவும் 1965 ஓகத்து 20 ம் திகதி வெளிவந்த 666 ம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கைக்கிணங்கவே கவனிக்கப்படும். திணைக்கள அல்லது கூட்டுத்தாபன தலைவர்கள் மேற்குறிப்பிட்ட திறைசேரிச் சுற்றறிக்கைக்கு இணங்க உத்தியோகத்தர்களை விடுவிக்க முடியுமா என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

(ஆ) அபேட்சகர் அரசாங்க சேவையில் முன்னரே உறுதிப்படுத்தப்பட்டிருந்தாலன்றி நியமனங்கள் யாவும் நியமித்த திகதியிலிருந்து மூன்று ஆண்டுகட்குத் தேர்வாய்வு முறையில் அமையும்.

(இ) விண்ணப்பதாரர்கள் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச்சட்ட ஏற்பாடுகளின் விதிகளுக்கு இணங்கவும் தற்போதிருக்கும் அல்லது இனிமேல் உருவாக்கப்படும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கவும் அரசாங்க மொழிக் கொள்கைக்கு அமைந்து நடக்கும்படி வேண்டப்படுவர்.

(ஈ) தேர்வாய்வுக்குரிய கால எல்லை முடிந்தபின் உறுதிப்படுத்துவது பிறவற்றுள் அரசகரும மொழித் தேவைகளுக்கு இணங்குவதைப் பொறுத்திருக்கும்.

5. **ஒப்பந்த நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் சகாய நிதி நன்மைகட்குத் தகுதியுடையவர்.

6. **மருத்துவ சோதனை.**—சபையின் மருத்துவ உத்தியோகத்தரால் நடத்தப்படும் மருத்துவ சோதனையில் நியமனம் பெறுபவர் சித்தியெய்துதல் வேண்டும்.

7. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் கீழ்க் குறிப்பிட்ட சான்றிதழ்களின் பிரதிகளை (மூலங்கள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (**பி. கு.**—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்காகிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

(ஆ) மிகக் கூடிய கல்வித் தகைமை உயர் தொழிலுக்குரிய தகைமைச் சான்றிதழ்கள்.

(இ) குணவியல்புச் சான்றிதழ்கள் இரண்டு; இவற்றுள் ஒன்று கல்விப் பணிப்பாளர் கல்லூரிப் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) முன்னர் வேலை வழங்கியவர்களிடமிருந்து அங்கு செய்த கடமைகளின் தன்மையைக் காட்டும் சான்றிதழ்.

8. விண்ணப்பங்கள் அல்லது அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகள் யாவும் தலைவர், பாற்சபை, த. பெ. எண். 1155, கொழும்பு 5. என்ற விலாசத்திற்கன்றி சபையின் சேவையிலுள்ள வேறெந்த உத்தியோகத்தருக்கோ தனிப்பட்ட முறையில் அனுப்பக் த. பெ. எண் 1155,

தலைவர்,
பாற்சபை.

பாற்சபைத் தலைமைக் காரியாலயம்,
த. பெ. எண் 1155,
கொழும்பு 5.
14 மார்ச் 1973.

விண்ணப்பப் படிவம்

**கணக்குப் பதிவியலாளர் பதவி—தரம் VI**

1. முழுப்பெயர் :————.

2. தனிப்பட்ட முகவரி :————.

3. விண்ணப்பதாரர் பிறந்த இடமும் திகதியும் :————.
(பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

4. விண்ணப்பதாரரின் தகப்பனுர் பிறந்த இடம் :————.

5. உயர் கல்வித் தகைமைகள் ————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

6. உயர்தொழிலுக்குரிய தகைமைகள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. சிங்களம்/தமிழ் ஆகியவற்றில் அறிவு :————.

8. முன் அனுபவ விவரங்கள் :————.
(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.)

| வேலை செய்த நிறுவனத்தின் பெயர் | பதவி | சேவைக்காலம் தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|
| .................................... | .............. | ............ | ............ |
| .................................... | .............. | ............ | ............ |

9. தற்போதைய உத்தியோக விபரங்கள் :————.

| நிறுவனத்தின் பெயர் | பதவி | சேவைக்காலம் தொடக்கம் | முடிவு |
|---|---|---|---|
| .................................... | .............. | ............ | ............ |
| .................................... | .............. | ............ | ............ |

10. விண்ணப்பதாரரின் குணம் பற்றிச் சான்று பகரக்கூடிய இருவரின் பெயர்கள் :————.

————,
விண்ணப்பதாரர் கையொப்பம்.

திகதி :————.

6-303—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

**ஸ்ரீ லங்கா தரைப்படையில் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்**

ஸ்ரீ லங்கா தரைப்படையின் இலங்கை மின்சார இயந்திரப் பொறியியலாளர்கள் பிரிவில் நுண்தொழில் உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் நிரந்தர அரசாணை அமர்வில் இரண்டாவது லெப்டினனட் பதவியில் அமர்த்தப்படுவர்.

3. (அ) சேர்த்துக்கொள்ளப்படும் விண்ணப்பகாரருக்கு பதவிக்கேற்ப சம்பளமும் சகாயப்பணமும் பின்வருமாறு கொடுக்கப்படும் :—

இரண்டாவது லெப்டினனட்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 7,140. (மாதம் ஒன்றிற்கு ரூபா 595.)

லெப்டினனட்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 7,500–5 × 180—ரூபா 8,400 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 635–5 × 15—ரூபா 700 வரை)

கப்டன்—வருடம் ஒன்றிற்கு ரூபா 9,240–8 × 180—ரூபா 10,680 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 770–8 × 15—ரூபா 890 வரை).

மேஜர்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 11,400–8 × 240—ரூபா 13,320 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 950–8 × 20—ரூபா 1,110 வரை).

லெப்டினனட் கேர்ணல்.—வருடம் ஒன்றிற்கு ரூபா 15,000–7 × 360—ரூபா 17,520 வரை. (மாதம் ஒன்றிற்கு ரூபா 1,250–7 × 30—ரூபா 1,460 வரை).

(ஆ) கீழ்க்காணப்படும் சகாயப்பணமும் கொடுக்கப்படும் :—

**மணமான அதிகாரிகளின் பணிக்கொடை**

மாதமொன்றிற்கு ரூபா 575 ம் ரூபா 600 க்கு குறைவும்—மாதம் ரூபா 80.00

மாதமொன்றிற்கு ரூபா 600 ம் ரூபா 625 க்கு குறைவும்—மாதம் ரூபா 82.50

மாதமொன்றிற்கு ரூபா 625 ம் ரூபா 650 க்கு குறைவும்—மாதம் ரூபா 85.00

மாதமொன்றிற்கு ரூபா 650 ம் ரூபா 675 க்கு குறைவும்—மாதம் ரூபா 87.50

மாதமொன்றிற்கு ரூபா 675 ம் ரூபா 700 க்கு குறைவும்—மாதம் ரூபா 90.00

மாதமொன்றிற்கு ரூபா 700 ம் ரூபா 725 க்கு குறைவும்—மாதம் ரூபா 92.50

மாதமொன்றிற்கு ரூபா 725 ம் ரூபா 750 க்கு குறைவும்—மாதம் ரூபா 95.00

மாதமொன்றிற்கு ரூபா 750 ம் ரூபா 775 க்கு குறைவும்—மாதம் ரூபா 97.50

மாதமொன்றிற்கு ரூபா 775 ம் அதற்குக் கூடவும்—மாதம் ரூபா 100.00

**வேறு ஏனைய பணிக்கொடைகள்**

(i) தொடக்க அணியடுக்கு பணிக்கொடை, ரூபா 1,000.

(ii) கோல அணிபேணல் பணிக்கொடை, மாதம் ரூபா 25.

(iii) வெளியில் வசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்ட, மணமான, மணமாகாத அதிகாரிகளுக்கு, மாதம் ஒன்றிற்கு சேவையாளர் பணிக்கொடை, மாதம் ரூபா 75,

(iv) பிரிந்திருக்கைப்படி : 1. தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகப்படாத கால வரையறைக்கு, வழமையான கடமைகளின் காரணமாக, பாசறையினுள் வசிக்கும்படி, மணமான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 1.50. 2. அவசரகால நிலைமைக்காகவோ அல்லது விசேட கடமைகள் காரணமாகவோ, தொடர்ச்சியாக 14 நாட்களுக்கு அதிகமான கால வரையறையினுள் பாசறையினுள் வசிக்கும்படி மணமான அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டிருந்தால், நாளொன்றுக்கு ரூபா 2.

(v) பிரயாண, அத்துடன் இணைந்த பணிக்கொடைகள் அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுபடும் படியாகும்.

(இ) உத்தியோகத்தர்கள் கீழ்க்காணப்படும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கும்படியும், அவரவர்களின் சம்பளம், சேவைக்கு ஏற்பவும் ஆளப்படுவர்.

(i) 1961 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 28 ம் திகதிய 12,395 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச்சட்டக் கோவையின் பிரகாரம் காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(ii) 1949 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் 10 ம் திகதிய 10,028 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான ஒழுங்குவிதிகளுக்கு இணங்க காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க.

(iii) 1961 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28 ம் திகதிய 12,680 இலக்கத்தையுடைய இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1961 ஆம் ஆண்டின் தரைப்படை வேதனச் சட்டக்கோவை உபகாரச் சம்பள பணிக்கொடைக் கோவைக்கும் இது சம்பந்தமாக காலத்திற்குக் காலம் செய்யப்படும் திருத்தங்களுக்கும் இணங்க,

மற்றும் ஏனைய தகவல்கள் கொழும்பு, தரைப்படைத் தலைமை நிலையத்தில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணும் தகைமைகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும் :—

(அ) **தேசிய இனம்.**—விண்ணப்பகாரர்கள் ஸ்ரீ லங்கா பிரசையாயிருத்தல் வேண்டும் ;

(ஆ) **வயது.**—விண்ணப்பகாரர்கள் 6.7.1973 திகதியன்று 28 வயதுக்குக் கூடாதவராய் இருத்தல் வேண்டும் ;

(இ) **கல்வித்தகைமைகளும் உயர்தொழில் தகைமைகளும்.**—விண்ணப்பகாரர்கள் கீழ்க்காணப்படுபவற்றில் ஏதாவது ஒன்றில் தகைமையுடையவராய் இருத்தல் வேண்டும் :—

(i) இலங்கை தொழிநுட்ப பயிற்சிக் கல்லூரியில் அல்லது அதற்குச் சமமான கல்லூரியில் கனிஷ்ட தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் பயிற்சிநெறியை பூர்த்தி செய்தவராய் அல்லது ஒரு இயந்திரப் பொறியியலாளர்கள் பட்டதாரியாய் இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தின் ஆதிக்கம் உள்ள திணைக்களம் ஒன்றில் அல்லது ஏதாவது வகையான மோட்டார் தனித்த விற்பனையாளர் ஸ்தாபனம் ஒன்றில் குறைந்தபட்சம் 3 வருடங்கள் செய்முறை அனுபவம் உள்ளவராயும் மோட்டார் இயந்திர அனுபவம் உள்ளவராயும் இருத்தல் வேண்டும்,

(ii) லண்டன் சிட்டி & கில்ட்ஸ் ஸ்தாபனத்தின் மோட்டார் வாகன பொறியியலாளர்கள் சான்றுப் பத்திரம் வழங்கப் பட்டவராயும் அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தின் ஆதிக்கம் உள்ள திணைக்களம் ஒன்றில் அல்லது ஏதாவது வகையான மோட்டார் தனித்த விற்பனையாளர் ஸ்தாபனம் ஒன்றில் குறைந்த பட்சம் 3 வருடங்கள் செய்முறை மோட்டார் இயந்திர பொறியியலாளர் அனுபவம் உள்ள வராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை அல்லது கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (மேல் நிலை) பரீட்சையைப் பூர்த்தி செய்தவராயும், அரசாங்கத்தின் அல்லது அரசாங்கத்தின் ஆதிக்கம் உள்ள திணைக்களம் ஒன்றில் அல்லது ஏதாவது வகையான மோட்டார் இயந்திர தனித்த விற்பனையாளர் ஸ்தாபனம் ஒன்றில் குறைந்த பட்சம் 5 வருடகால மோட்டார் இயந்திர ஒப்பந்தமுறி தொழில் பயிலுவோர் பயிற்சியை பூர்த்திசெய்தவராயும் இருத்தல் வேண்டும்.

(ஈ) **வைத்தியத்தகைமைகள்.**—விண்ணப்பகாரர்கள் தரைப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட வைத்தியப் பரிசோதனைக்கு உள்ளாதல் வேண்டும்.

(உ) **அடையாளச் சீட்டு.**—விண்ணப்பகாரர்கள் தங்களை அறிமுகம் செய்வதற்கு தகுந்த அத்தாட்சிப்பத்திரங்களை வைத்திருத்தல் வேண்டும். ஆட் பதிவுத்திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது தபால் கந்தோர்கள் தலைமை அதிபதியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை, அல்லது மோட்டோர் போக்குவரத்து அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட தகுதிப் பத்திரம் இந்நோக்கத்திற்காக ஏற்றுக்கொள்ளப்படும்.

**5.** விண்ணப்பகாரர்கள் தம் விண்ணப்பங்களை கீழ்க்கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் போன்று எழுதப்பட்டு **6.7.73** திகதியன்று நண்பகல் 12 மணிக்குப் பிந்தாமல் தரைப் படைத் தலைமை நிலையம், தபால் பெட்டி இலக்கம் **553,** கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பங்களை அனுப்பும் கடிதவுறையில் " விண்ணப்பங்கள்—நுண்தொழில் உத்தியோகத்தர்கள் இ. மி. இ. பொ." என எழுதப்பட்டிருத்தல் வேண்டும். முடிவு திகதிக்குப்பின் இத்தலைமை நிலையத்தில் கிடைக்கும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

**6.** ஏற்கனவே அரசாங்க சேவையில் இருக்கும் விண்ணப்பகாரர்களின் விண்ணப்பங்கள் தம் திணைக்களத் தலைவருக்கூடாகச் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். இந்த விண்ணப்பகாரர்கள் தெரிவு செய்யப்படின் அவர்களைச் சேவையில் இருந்து விடுவிக்கப்படலாம் என்ற சான்றிதழ் ஒன்றும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். தரைப்படை பணிக்கொடைச் சேவைக்குச் சேர்த்துக் கொள்வதற்கு தம் திணைக்களத்தினால், அத் திணைக்களத் தலைவரினால் கொடுக்கப்பட்ட சான்றிதழ் அனுப்பப்படல் வேண்டும். இவ்வாறு அனுப்பப்படாத இடத்து அரசாங்க பணிக்கொடை சேவைகள் தரைப்படைப் பணிக்கொடைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.

**7.** விண்ணப்பங்களுடன் இவற்றின் பிரதிகள் இணைத்தனுப்புதல் வேண்டும்—

(அ) பிறப்புச் சான்றிதழ் ;

(ஆ) கல்வித்தகைமைகளையும் உயர் தொழிற் தகைமைகளையும் காட்டும் சான்றிதழ் ;

(இ) விண்ணப்பகாரருடன் பரிச்சயமுடைய பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட குறைந்தபட்சம் இரண்டு நற் சான்றுப் பத்திரங்கள்.

**8.** மேலே கூறிய நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் விண்ணப்பகாரர்களில் இருந்து தொடக்கத் தெரிவு செய்யப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பகாரர்கள் இதன்பின் இறுதித் தெரிவு, தெரிவு செய்யப்பட்டவர்களில் இருந்து பாதுகாப்பு வெளிநாட்டலுவல்கள் அமைச்சினால் ஆக்கப் பட்ட தேர்வுச்சபை ஒன்றினால் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும். நேர்முகப்பரீட்சைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்களுக்கு அவ்வாறானவை பற்றி பரீட்சைகளின் இடம், நேரம் திகதி என்பன எழுத்துமூலம் அறிவிக்கப்படும். நேர்முகப் பரீட்சைகள் கொழும்பில் நடாத்தப்படும். இத்தொடர்பில் ஏற்படும் எவ்வித பிரயாணச் செலவோ அல்லது பிற செலவுகளோ இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படமாட்டாது.

**9.** தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பகாரர்கள் **1956** ஆம் ஆண்டின் **33** ம் இலக்க அரசாங்க மொழிக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கென விசேடமாக அரசாங்க மொழியதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஏற்கனவே செய்யப்பட்ட விதிகளுக்கும் அல்லது இனிமேல் செய்யப்படும் விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

**10.** பதவி உபகாரச் சம்பள உரித்துடையது அல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒரு சகாய நிதிக்குத் தமது உதவு தொகையாகத் தமது திரட்டிய சம்பளத்தின் ஆறு சதவீதத்தைக் கழித்தற்கு எழுத்துருவிலான தமது சம்மதத்தைக் கொடுக்குமாறு வேண்டப்படுவர். ஒரு சேவை உபகாரச் சம்பளத்தை அல்லது பணிக்கொடையை வழங்கப் படுதலைக் குறிக்கும் **1961** ஆம் ஆண்டின் தரைப்படை உபகாரச் சம்பளங்களும், பணிக்கொடைகளும் பற்றிய சட்டக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகள் ஏற்புடையனவாகா.

எம். ஏ. ஜயவீர,
பிரிகேடியர்,
தரைப்படைத் தளபதிக்காக.

1973 ம் ஆண்டு மே மீ 30 ந் உ.

**ஸ்ரீலங்கா தரைப்படையின் இலங்கை மின்சார இயந்திரப்பொறியியலாளர் பிரிவில் நுண்தொழில் உத்தியோகத்தர்கள் பதவிக்கான விண்ணப்பம்.**

1. முழுப் பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————
2. தேசிய இனம் (பரம்பரையான இலங்கைப் பிரசையா அல்லது பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசையா என்பதைக் குறிப்பிடுக. பதிவு செய்யப்பட்ட பிரசையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக) : ————.
3. முகவரி : வீட்டு விலாசம் : ————.
   அலுவலக விலாசம் : ————.
4. பிறந்த திகதி : ————. 6.7.1973 திகதியன்று வயது : ———— வருடம்; ———— மாதம் ———— நாள்.
5. பிறந்த இடத்தின் பெயரும் தற்போதைய முகவரியும்.

| | முழுப்பெயர் | பிறந்த இடம் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை<br>தாய் | | | |

6. நீர் விவாகமானவரா அல்லது விவாகமாகாதவரா : ————.
7. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உடற்பயிற்சி விளையாட்டுகள் சம்பந்தமாக நீர் பெற்ற தனிச் சிறப்புகள் : ————.
8. பாடசாலையில் அல்லது சர்வகலாசாலையில் உமக்குரிய சிறப்பாகப் பெற்ற பிற செயல்கள் : ————.
9. படைக்கலந்தாங்கு சேவைகளில், இலங்கை தொண்டர் படை, இலங்கை பயிலுநர் சிறப்பணி, இலங்கை சாரணர் படை ஆகிய தொண்டர் நிறுவனங்களில் சேவை செய்திருப்பின் அவற்றின் விபரங்கள் : ————.
10. இந்நியமனம் சம்பந்தமாக உமக்குரிய வேறு என்ன விசேட தகைமைகள் உண்டு என்பதை குறிப்பிடுக : ————.
11. இதற்குமுன் படைக்கலந்தாங்கு சேவைகளில் ஏதாவது ஒன்றிக்கு விண்ணப்பம் செய்திருப்பின் அதன் முடிவு யாதெனக் குறிப்பிடுக : ————.
12. கீழ்க்காணப்படும் பாடசாலை அல்லது சர்வகலாசாலை விபரங்களைத் தருக : ————.
    பாடசாலையின் அல்லது சர்வகலாசாலையின் பெயர் : ————.
    சேர்ந்த திகதி : ————.
    விலகிய திகதி : ————.
    பொது/உயர்தொழிற் கல்வி சித்தியெய்திய பரீட்சைகள் :.————.
13. கீழ்க்காணப்படும் பாடசாலை அல்லது சர்வகலாசாலையை விட்டு விலகிய பின் நீர் செய்த தொழில் விபரங்களைத் தருக :.————.
    வேலை கொள்வோரின் பெயர் : ————.
    செய்த தொழில் :————.
    சேவை செய்த காலம் : ————. தொடக்கம், ————வரை.
14. குணச்சான்றுப் பத்திரங்கள் வழங்கியோரின் பெயர்களும் முகவரிகளும் : ————.

மேலேகொடுக்கப்பட்ட விபரங்கள் அனைத்தும் எனது அறிவிற்கெட்டிய வரையில் அவை சரியானவை என்றும் உண்மையானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

————.
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி :————.

**6—309—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63**

திருத்தம்

உள்நாட்டு இறைவரித்திணைக்களம்

சட்டப்பணியாளர் பதவி

இலங்கை வர்த்தமானி இல. 61, 25/5/73 ந் திகதிய 844 ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட பிரசுரம் சம்பந்தமாகக் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அதில் பந்தி 1ம் 4 ம் அதிலுள்ளவாறல்லாது கீழ்க் கண்டவாறு வாசிக்கப்படல் வேண்டும்.

பந்தி 1 (அ) உள்நாட்டு விண்ணப்பங்கள்—14 யூன் 1973.

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—21 யூன் 1973.

பந்தி 4 (ஆ) 14.6.73 ஆந் தேதியில் 22 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

6-414—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

இலங்கைக் கடற்படை

களஞ்சியப் பொறுப்பாளர் பதவி—தரம் III

இலங்கை வர்த்தமானி இல. 61, 25.5.73 ந் திகதிய 844 ஆம் III) பதவி ஒன்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சம்பளம்.**—இப்பதவிக்கு அளிக்கப்படும் திரட்டிய சம்பள அளவு ஆண்டொன்றுக்கு ரூ. 3,000—90—ரூ. 5160 ஆகும்.
(அடிப்படைச் சம்பளம் ரூ. 960—72—2,688)

3. **வேண்டப்பட்டுள்ள கல்வித்தகைமைகளும், வேறு தகைமைகளும்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளைத் தான் உடையவர் என்பதை அத்தாட்சிப்படுத்த வேண்டும்.

(i) (அ) சிரேஷ்ட தராதரப்பத்திரம் அல்லது,

(ஆ) இரண்டு தடவைகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ் அத்துடன் எண்கணிதம்/கணிதம் உட்பட 6 பாடங்களைக் பெற்ற கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) ப் பத்திர, அல்லது

(இ) வேறு ஏதாவது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

(ii) களஞ்சிய வேலையிலும் கணக்கியலிலும் நல்ல அறிவு இருப்பதுடன் அரசாங்க திணைக்களம் ஒன்றிலோ அல்லது நன்கு மதிக்கப்பட்ட தாபனம் ஒன்றிலோ ஆகக் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும். கடற்படைக் களஞ்சியத்திலும் பொறியியல் களஞ்சியத்திலும் உள்ள அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

4. **வேண்டப்பட்டுள்ள வேறு தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான்—

(i) 1973.07.12 ஆம் திகதி 35 வயதுக்குக் கூடாதவர் என்றும்,

(ii) மிக நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவர் என்றும், சான்று அளிக்க வேண்டும்.

5. **ஆட்சேர்த்தல் நியதிகள்.**—(i) இப்பதவி நிரந்தரமானது. தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் அரசாங்க சேவைச் சகாய நிதிக்குத் தனது திரட்டிய சம்பளத்தில் 6 வீதத்தினை அளிக்க வேண்டும். அரசாங்க உதவுதொகை அவருடைய திரட்டிய சம்பளத்தின் 9 வீதமாகும்.

(ii) தேர்ந்தெடுக்கப்பகும் அபேட்சகர் குறுகியகால அறிவித்தலின் பேரில் கடமைகளை மேற்கொள்ளும்படி வேண்டப்படுவதுடன் தீவின் எப்பாகத்திலாயினும் சேவை புரியத்தயாராக இருக்கவும் வேண்டும்.

6. **சேவை நிபந்தனைகள்.**—தேர்ந்தெடுக்கப்படும் அபேட்சகர் அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு அரசாங்க சேவைக்குப் புதிதான ஒருவராயின்—

(i) தகுதிகாண் காலவெல்லை 3 வருடங்களாகும்.

(ii) அவர் 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்தவும், தற்போது நடைமுறையிலுள்ளதும் அல்லது எதிர்காலத்தில் ஏற்படுத்தக் கூடியதுமான ஏதேனும் அரசகரும மொழிச் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவதற்குமான நிபந்தனைக்குச் சம்மதித்தல் வேண்டும்.

(iii) இதன் கீழ் (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு தகுதிகாண் கால வெல்லையின்போது அரசகரும மொழியான சிங்களத்தில் தொழிலாற்றக் கூடிய அறிவைப் பெறுதல் வேண்டும்.

(iv) தகுதிகாண் காலவெல்லையின் முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தலானது ஏனையவுட்பட நியமனத் திகதியிலிருந்து முறையே சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் ஓராண்டினுள் தரம் I இலும் ஈராண்டினுள் தரம் II இலும் மூன்றாண்டினுள் தரம் III இலும் சித்தி எய்துவதைப் பொறுத்ததாகும். விதிக்கப்பட்ட காலவெல்லைக்குள் விதிக்கப்பட்ட இச் சோதனைகளில் சித்தி பெறத்தவறின் சம்பள ஏற்றங்கள் இடைநிறுத்தப்படும். விதிக்கப்பட்ட கால வெல்லைக்கு நேரடுத்து மேலும் 6 மாத காலவெல்லைக்குள் அச் சோதனையில் சித்திபெறுவிடின் இடை நிறுத்தலானது நிறுத்தலாக மாற்றப்படுவதுடன் சோதனையில் சித்தி பெறப்படும்வரை அந்நிறுத்தலானது இயங்கவும் செய்யும்.

(v) தகுதிகாண் காலவெல்லையின் இறுதியில் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சியில் சித்திபெறுவிடின் தாபனக்கோவையின் அதிகாரம் II இன் உபபிரிவுகள் 10 : 14 உள்ள ஏற்பாடுகள் பொருந்தும்.

7. விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் பிரதிகளை இணைத்தல் வேண்டும்.

(i) பிறப்புப் பதிவுச்சான்றிதழ் (ஞானஸ்ஞானசான்றிதழ்களோ அல்லது உதவிபெறும் பாடசாலைகளின் ஒழுங்கு விதிகளுக்காக வழங்கப்பட்ட பத்திரங்களோ ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.)

(ii) பெற்றுக்கொள்ளப்பட்ட உயர் கல்வித் தகைமைகளுக்கான சான்றிதழ்.

(iii) முன்னைய அனுபவம் பற்றிய சான்றிதழ்கள்,

(iv) அண்மையில் பெற்ற இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள்.

மேலே காட்டப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் இல்லாமல் ஏற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. பிரித்தானிய ஐக்கிய இராச்சியத் தளத்தை இலங்கை அரசாங்கம் பொறுப்பேற்றதன் விளைவாக 1956 ம் ஆண்டு யூலை மாதம் 6 ம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஐக்கிய இராச்சியச் சேவையிலிருந்து விலக்கப்பட்ட குடியியல் நிர்வாக ஊழியர்களுக்கு பின்வரும் சலுகைகள் வழங்கப்படும்.

(i) **வயது.**—அவர்களுக்கு வசதியளிக்கும் பொருட்டு குறிக்கப்பட்ட கூடிய வயது எல்லையிலிருந்து அவர்களுடைய ஐக்கிய இராச்சிய சேவைக் காலத்தைக் கழித்தல்.

(ii) **கல்வித்தகைமைகள்.**—சி. பா. த பத்திரம் வேண்டப்பட்ட விடத்து க. த. பத்திரம் வேண்டப்படும்.

9. இவ்வர்த்தமானியின் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருந்தக் கூடிய பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

10. அரசாங்க அலுவலகங்களில் சேவை புரியும் விண்ணப்பதாரர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகுதியற்றோராவர்.

11. மேலே கேட்கப்பட்டுள்ள முன்னைய அனுபவம் தொழில் முதலிய முழுவிபரங்களை, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப்படிவத்தில் கொடுத்து, பதிவுத்தபால் மூலம் குடியியல் நிர்வாக அலுவலரும் கணக்காளரும், இலங்கைக் கடற்படை, த. பெ. இல. 593, கொழும்பு-1 என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "களஞ்சியப் பொறுப்பாளர் பதவி—தரம் III க்கான விண்ணப்பம்" என எழுதப்பட்டு 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ குடியியல் நிர்வாக அலுவலரும் கணக்காளருமானவருக்கு கிடைக்கும் வண்ணம் அனுப்பப்படுதல் வேண்டும்.

வே. அரியரத்தினம்.
குடியியல் நிர்வாக அலுவலரும் கணக்காளரும்.

தலைமை அலுவலகம்,
இலங்கைக் கடற்படை,
த. பெ. இல. 593,
கொழும்பு-1,
1973.06.28.

மாதிரி விண்ணப்பப் படிவம்

இலங்கைக் கடற்படை

களஞ்சியப் பொறுப்பாளர் பதவி—தரம் III

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்கள்) :————

2. தபால் முகவரி :————.

(i) சொந்த :————.

(ii) அலுவலக :————.

3. (i) பிறந்த திகதி :————.

(ii) பிறந்த இடம் :————.

4. நாட்டினம் :—

(i) பிறப்பினால்/பதிவினால் :————.

(ii) பிறப்பினாலாயின் :————.

(அ) விண்ணப்பதாரரின் தந்தை பிறந்த இடம் : ————.

(ஆ) விண்ணப்பதாரரின் பாட்டன் பிறந்த இடம் : ————.

5. விவாகமானவரா அல்லது தனியாளா ? ————.

6. கல்வித்தகைமைகள் :————.
(சித்தியடைந்த பரீட்சைகளினதும் பாடங்களினதும் முழு விபரங்களைத் திகதிகளுடன் தருக. சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்)

7. அனுபவம் பற்றிய முழு விபரங்களும் திகதிகளுடன் : ————.

8. பாடசாலையை விட்டு விலகியதிலிருந்து ஆற்றிய தொழில் விபரங்கள் :————.

9. நற்சான்றுப் பத்திரங்களைப் பெற்றவர்களின் பெயர்களும் பதவிகளும் :————.

10. வேறு ஏதாவது விபரங்கள் :————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் சரியானவையென்றும், உண்மையானவையென்றும் நான் உறுதியளிக்கின்றேன். இதில் அடங்கிய ஏதாவது விபரங்கள் பொய்யானவையென அல்லது சரியற்றவையென கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவிற்கு முன்னராயின் தகைமை நீக்கத்திற்கும் நியமனத்திற்குப் பின்னராயின் வேலை நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதை நான் நன்கு அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

6-310—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

அரசாங்கக் கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்புக்கு

நியமிக்கப்படுவதற்காய யாவர்க்குமுரிய

போட்டிப் பரீட்சை—1973

1971 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் தேதிய 14,961 ஆம் இலக்க இலங்கை அரசாங்கச் செய்திமடலில் வெளியிடப்பட்ட, 1971 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆந் தேதியிடப்பட்ட அரசாங்கக் கணக்காளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பின் பந்தி 4 (ங) இன் நியதிகளின் பிரகாரம், கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்காய இந்த அறிவிப்பில் தரப்பட்டுள்ள வேண்டிய தகைமைகளையுடைய விண்ணப்பகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **தெரிவு செய்யும் முறை.**—இரண்டு பகுதிகளாக நடாத்தப்படும் யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் தெரிவு செய்யப்படும். அவ்விரண்டு பகுதிகளாவது—

(1) எழுத்துப் பரீட்சை

(2) வாய்மொழிப் பரீட்சை.

எழுத்துப் பரீட்சை, 1973 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம், 12ஆம், 13 ஆம் தேதிகளில் கொழும்பில் நடாத்தப்படும்.

எழுத்துப் பரீட்சைக்குப் பின்னர் விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்படுமொரு தேதியில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும்.

ஒவ்வொரு வினாத்தாளிலும் 45 சதவீதத்திற்கு மேலான புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளே நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றத் தகவுடையவராவர்.

3. **பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் முறை**.

(அ) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் தேதி வரை பரீட்சை ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இப் படிவங்களை அஞ்சலில் பெறவேண்டின், சொந்த முகவரியெழுதப்பட்ட, முத்திரையொட்டப்படாத, 9"×4" அளவினதான கடித உறையொன்று பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இக் கடித உறையின் இடதுபுற மேல் மூலையில் பரீட்சையின் பெயர்—"விண்ணப்பப் படிவம்—கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை" என்பது தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்திக்கு ஒரு படிவத்திற்குமேல் வழங்கப்பட மாட்டாது.

(ஆ) ஏலவே அரசாங்க சேவையிலில்லாத விண்ணப்பகாரர்கள், பரீட்சார்த்தியைப் பற்றித் தமக்குள்ள தனிப்பட்ட அறிவிலிருந்து அவரின் ஒழுக்கம், திறன் என்பன பற்றி சான்று பகரக்கூடிய இரு நடுவர்களின் பெயர்களைக் குறிப்பிடுதல் வேண்டும்.

(இ) இப் பரீட்சைக்குரிய கட்டணம் 200/- ரூபாவாகும். விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள கூண்டில் 200 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு, அவற்றின் மேல் பரீட்சார்த்தியின் கையொப்பத்தையும் தேதியையும் இடுவதன் மூலம், முறையாக அவை செல்லுபடியாகாதனவாக ஆக்கப்படுதல் வேண்டும்.

விண்ணப்பகாரரின் கையொப்பம், அத்தாட்சிப்படுத்தற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படுதல் வேண்டும். ஏலவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்கள், தமது கையொப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஓர் உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும். பிற விண்ணப்பகாரர்கள், தமது கையொப்பங்களைப் பின்வரும் ஆட்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்துவித்தல் வேண்டும் :—அதாவது, சமாதான நீதியரசர், சத்திய ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்கப்பாடசாலை அல்லது பணிப்பாளர் மூகாமையிலுள்ள பாடசாலை அதிபர், கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைப்படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர், அல்லது ஆண்டுக்கு 4,800/- ரூபாவோ அதற்கு மேலோ திரட்டிய வேதனம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், பௌத்த கோயில் பிரதம மடாதிபதி அல்லது பிரதம குரு அல்லது வழிபாட்டுத் தலத்திற்குப் பொறுப்பாகவுள்ள அல்லது அத்தலத்தில் உயர் பதவி வகிக்கும் பிற சமயக் குருக்களில் ஒருவர்.

(ஈ) இப் பரீட்சைக்குச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் பற்றியும் முழுதாகவோ ஒரு பகுதியாகவோ திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பங்களை நிரப்பி, அவற்றை, கொழும்பு 2, அ. பெ. இல. 1503, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை, 1973 ஆம், ஆண்டு யூலை மாதம் 3 ஆந் தேதிக்கு முன்னர் சென்றடையுமாறு பதிவு அஞ்சலில் அனுப்புதல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் தள்ளப்படும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பகாரர்கள் தமது விண்ணப்பங்களை, விண்ணப்ப முடிவுத் தேதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளரைச் சென்றடையத் தக்கதாகத் தமது திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள், பரீட்சை ஆணையாளர்க்கோ அவரின் திணைக்கள உத்தியோகத்தர் எவருக்குமோ தனிப்பட்ட முறையில் முகவரியிட்டனுப்பப்படுதலாகாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர், அதாவது, "கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை" என்பது தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

(உ) ஒரு விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய விண்ணப்பப் படிவம் தொடர்பான ஒரு கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டெதுவும் கவனிக்கப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் தாமதிப்பார்களாயின், அதனால் வரும் இடர்களுக்கு அவர்களே பொறுப்பாவர்.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துள்ள அஞ்சல் அட்டையில் பரீட்சார்த்திகள் தங்கள் பெயரையும் முகவரியையும் மாத்திரம் எழுதுதல் வேண்டும். இந்த அஞ்சல் அட்டை விண்ணப்பம் கிடைக்கப் பெற்றமையை அறிவிப்பதற்கு உபயோகிக்கப்படும். அதற்கிணங்கத் தங்கள் பெயரையும் முகவரியையும் கூறாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. தமது பெயரையும் முகவரியையுங் கூறிய பரீட்சார்த்தியொருவர், விண்ணப்ப முடிவு தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் ஒப்புக்கோடலைப் பெருவிடின், உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டுக்கு அமைந்தொழுகத்தவறினால், பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்ற முடியாது போகலாம்.

4. **பரீட்சைக்கு அனுமதித்தல்.**—(1) பரீட்சை ஆணையாளர், தமக்குக் கிடைத்த விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப் பரீட்சைநிலைய மேற்பார்வையாளர்க்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய அனுமதிப்பத்திரமொன்றினைக் காட்டத்தவறும் ஒரு பரீட்சார்த்தி, பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சையை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறித்தொதுக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எடுப்பதற்கு எப் பரீட்சார்த்தியும் அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை நாளன்று தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும். பரீட்சார்த்திகள் யாவரும் கவனிக்க வேண்டிய விதிகள், இவ்வறிவிப்பின் இறுதியில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள், இவ்விதிகளுக்குக் கட்டுண்டவராவர்.

பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சார்த்தி தமது அனுமதிப்பத்திரத்தைப் பெறுவிடின், அவர் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு. கொழும்பு-2. அ. பெ. இல. 1503, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரிக்கு (தந்தி முகவரி; "எக்சாம்ஸ்" கொழும்பு) அறிவித்தல் வேண்டும். அனுமதிப் பத்திரத்தைத் தான் பெறவில்லையெனப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கும்போது, பின்வரும் விவரங்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர்,

(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர்,

(இ) முகவரி,

(ஈ) விண்ணப்பம் அனுப்பிய தேதியும், பதிவிலக்கமும் அஞ்சல் அலுவலகமும்.

(2) பரீட்சைக்கு அனுமதியளிப்பதானது, தகுதியுடைமையை ஒப்புக்கொண்டதாகாது. எனினும், பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணிபின்படி, இப் பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிக அனுமதியளிக்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சை எடுத்தமை பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது நீக்கப்படும்.

5. **வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கை.**—இப்பரீட்சையின் மூலம் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களினெண்ணிக்கை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியினால் தீர்மானிக்கப்படும். போதியளவு எண்ணிக்கையான பரீட்சார்த்திகள் வேண்டிய தரத்தினை எய்தாவிடின், தேவையான பதவிகளினெண்ணிக்கையிலும் குறைவாக நிரப்பும் உரிமையை அல்லது பொது மக்கள் நலனுக்கு அவசியமென அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி கருதி, அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமேற்பட்டால் விதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட நியமனங்களைச் செய்யும் உரிமையை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி தன்மாட்டுக் கொண்டுள்ளார்.

(அ) பொது மக்களின் நன்மைக்காக இப் பரீட்சையை நடாத்தாமல் விடுவது அவசியமானதென அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி கருதுவாராயின் அவ்வாறு செய்யும் உரிமை அவருக்கு உண்டு. அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி இப் பரீட்சையைத் தள்ளிப் போடலாம்.

(ஆ) நியமனம் செய்யப்படும் காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரசகரும மொழி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய நியமனங்களுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படும், சித்திபெற்ற பரீட்சார்த்திகளுள் ஒருவரையேனும் அல்லது பலரையேனும் அங்ஙனம் நியமிக்காது விடும் உரிமையை அரசாங்க சேவை ஆணைக்குழு தன்மாட்டுக் கொண்டுள்ளது.

6. **தகைமை நிபந்தனைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் ஆகக் குறைந்த தகைமைகளை உடையவர்களாயிருத்தல் வேண்டும் :—

**குறிப்பு.**—இப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 20 சத வீதத்திற்கு மேற்படாத வெற்றிடங்கள் பெண் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படலாமென்ற பாப்புரைக்கமைய, பெண் பரீட்சார்த்திகளும் இப் பரீட்சையில் போட்டியிட அனுமதிக்கப்படுவர்.

(அ) அவர் ஏலவே இலங்கை அரசாங்க சேவையில் இல்லாதவராயின், இலங்கையராயிருத்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் பரம்பரையாக அல்லது பதிவு வழியாக இலங்கைக் குடியாயிருப்பவராகும்.

(ஆ) அவர் 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 3 ஆந் தேதியன்று 30 வயதிற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும். ஏலவே அரசாங்க சேவையிலுள்ள ஆட்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.

(இ) அவர் மிக நல்லொழுக்கமுடையவராகவும், உடல் அமைப்பு வாய்ந்தவராகவும், இலங்கையில் எப்பாகத்திலும் சேவை செய்யத்தக்க உடல் நலம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும். எனவே அரசாங்க சேவையிலில்லாத சித்தியெய்தும் பரீட்சார்த்தி, மருத்துவச் சோதனையொன்றில் தேறுமாறு வேண்டப்படுவர்.

(ஈ) அவர்—

(i) கணக்கியலைச் சிறப்புப் பாடமாகக் கொண்டு, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டமொன்றினைப் பெற்றவராயிருத்தல் வேண்டும் ;

அல்லது

(ii) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தில் இடைநிலைப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iii) பட்டயம்பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் (யூ. கே.) உறுப்பினராயிருத்தல் வேண்டும் ;

அல்லது

(iv) ஆக்கச்செலவு, வேலைகள் கணக்காளர் நிறுவகத்தின் (ஐ. சி. டபிள்யூ. ஏ) (யூ. கே ) பரீட்சைகளின் I ஆம் II ஆம் III ஆம் பிரிவுகளில் தேறியிருத்தல் வேண்டும் ;

அல்லது

(v) சான்றுபெற்ற கூட்டிணைப்புக் கணக்காளர் அவையின் (ஏ. சி. சி. ஏ.) (யூ. கே) பரீட்சைகளின் I ஆம் II ஆம் III ஆம் பிரிவுகளில் தேறியிருத்தல் வேண்டும் ;

அல்லது

(vi) இலங்கைத் தொழினுட்பக் கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் (டிப்புளோமா) பெற்றவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(vii) அங்கீகரிக்கப்பட்ட சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர்

அல்லது

(viii) பட்டயம் பெற்ற செயலாளர்கள் நிறுவகத்தில் இடைநிலைப் பரீட்சையில் தேறியிருத்தல் வேண்டும்.

அல்லது

(ix) ஆக்கச் செலவு கைத்தொழிற் கணக்காளர் நிறுவகத்தின் இடை நிலைப் பரீட்சையிற் தேறியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—இப்பரீட்சையில் போட்டியிடும் பரீட்சார்த்திகள், அவர்களின் கல்வி, உயர் தொழிற்றகைமைகள் பற்றிய சான்றிதழ்களையும் பிற சாதனங்களையும் அனுப்புமாறு பரீட்சை ஆணையாளர் கேட்டவுடன் அனுப்புவதற் கேதுவாக, அவற்றை ஆயத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

7. **அடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள், தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும். மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில், பரீட்சை மண்டபத்தில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாள அட்டை ;

(ஆ) இப் பரீட்சைத் தேதிக்கு முன்னதாக மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும், வலிவுள்ளதுமான ஒரு கடவுச்சீட்டு (பாஸ்போட்) ;

(இ) ஓர் அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது அரசாங்க யாக்கத்தின் அல்லது பிற நியதிச்சட்டமுறையான அமைப்பின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சைத் தேதிக்கு முன்னதாக மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும், வைத்திருப்பவரின் புகைப்படத்தைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

(ஈ) ஆட்பதிவுத் திணைக்களத்தினுல் வழங்கப்பட்ட ஆளடை யாள அட்டை.

(உ) அனுமதிச்சீட்டை அத்தாட்சிப்படுத்தத் தகவுடைய உத்தி யோகத்தரினுல், கடவுச்சீட்டு (பாஸ்போட்) அளவுடைய புகைப் படத்தின் மறுபக்கத்தில் பின்வருமாறு உறுதிப் படுத்தப்பட்ட புகைப்படம்.

மறுபக்கத்திலுள்ள புகைப்படம் இங்கு ஒப்பமிட்டுள்ளவராகிய ....................................(பரீட்சார்த்தியின் முழுப்பெயர்) அவர் களுடைய தென உறுதிப்படுத்துகின்றேன்.

....................................
பரீட்சார்த்தி சார்பில் வழங்கப்பட்டது.

....................................
பரீட்சார்த்தியின் ஒப்பந்தை அத்தாட்சிப் படுத்துபவரின் ஒப்பம்.

....................................
....................................
பெயரும் பதவிப் பெயரும்.
திகதி :..........................
(அத்தாட்சிப்படுத்தப்பட்ட இப்புகைப்படம் மேற்பார்வையாளரி னுல் வைத்திருக்கப்படல் வேண்டும்).
மேல் கூறப்பட்ட சாதனங்களில் யாதேனுமொன்றைப் பரீட்சார்த்தி சமர்ப்பிக்கத் தவறின் அவரின் பரீட்சார்த்தித் தன்மை தற்காலிக ஏற்பாட்டிற்கமையும். அப்படிப்பட்ட பரீட்சார்த்தித் தன்மை பரீட் சையாளரின் நற்றுணிபினுல் நிராகரிக்கப்படக் கூடும்.

8. பொய்யான தகவல் கொடுப்பதற்குரிய தண்டம்.—இப்பரீட் சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில் லாதவரெனக் காணப்பட்டால், பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்போதோ, பரீட்சைக்குப் பின்னரோ, எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தமை தள்ளுபடி செய் வதற்கேதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விவரங்களிலெவையேனும் அவருடைய அறிவுக்கெட்டியவரை பொய்யானவையெனக் காணப் பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மை யெதனையும் மறைத்திருந்தால், அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

9. பரீட்சை மொழி.—எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ் ஆங் கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் கல்வி கற்ற மொழியை அல்லது அரசகரும மொழியைத் தேர்ந் தெடுக்கலாம். பரீட்சார்த்திகள் தாங்கள் தேர்ந்தெடுத்த மொழியை, விண்ணப்ப முடிவு தேதிக்குப் பின்னர் மாற்ற அனும திக்கப்படமாட்டார்.

10. பரீட்சைத் திட்டம்.—பரீட்சைத் திட்டம் வருமாறு :—

| | புள்ளிகள் |
|---|---|
| 1. கணக்குப் பதிவியலும் கணக்கியலும் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக் கான ஒரு வினுத்தாள் ... ... ... | 100 |
| 2. கணக்காய்வு 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக் கான ஒரு வினுத்தாள் ... ... ... | 100 |
| 3. வாணிப கணிதம் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக் கான ஒரு வினுத்தாள் ... ... ... | 100 |
| 4. ஆக்கச் செலவுக் கணக்கியல் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக் கான ஒரு வினுத்தாள் ... ... ... | 100 |
| 5. பொருளியலும் பொது நிதியும் 3 மணித்தியாலத்திற் கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினுத்தாள்... | 100 |
| 6. பொது வர்த்தக அறிவும் வர்த்தக எண்கணிதமும் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக் கான ஒரு வினுத்தாள் ... ... ... | 100 |
| 7. வாய் மொழிப் பரீட்சை* ... ... ... | 100 |

*இப்பரீட்சையை நடாத்தும் சபைக்கு, பரீட்சார்த்திகள் எழுத் துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் கிடைக்கத்தக்கதாகவிரா.

பரீட்சார்த்திகள், வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவதற்கு, ஒவ்வொரு வினுத்தாளுக்குமுரிய புள்ளி களில் 45% ஐப் பெறுதல் வேண்டும்.

11. பணிக்கமர்த்தும் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—
(i) இப்பதவிகள் நிரந்தரமானவை.

(ii) சித்திபெறும் பரீட்சார்த்திகள் இடமாற்றத்துக்காளாவர்; அத்துடன் அவர்கள் இலங்கையில் எந்த நிலையத்திற்கே னும் அனுப்பப்படலாம்.

(iii) இப்பரீட்சையில் சித்தியெய்தும் பரீட்சார்த்திகள், நியமிக் கப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குத் தகுதி கூர் நிலையில் நியமிக்கப்படுவர். அவர்கள் முதலில் சகாய நிதிய அடிப்படையில் நியமிக்கப்படுவர்.

(iv) சித்தியெய்தும் பரீட்சார்த்திகள் தாம், 1956 ஆம் ஆண் டின் 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தின் ஏற் பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக இப்பொழுதுள்ள ஏதேனும் சட் டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது வருங்காலத்தில் புகுத்தப்படக்கூடியனவான ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமைந்தொழுகுவர் என்னும் நிபந் தனைக்கு இணங்குதல் வேண்டும்.

(v) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக "புதி தாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் சித்தியெய்திய பரீட்சார்த்திகள், தமது தகுதிகூர் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். தகுதிகூர் காலமுடிவில் இப்பரீட்சார்த்திகளை உறுதிப் படுத்துவதானது, திருத்திகரமான வேலை, ஒழுக்கம் என் பனவற்றையும் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடைவதையும் பொறுத்திருக்கும். மூன்றுண்டு கால முடிவில், விதிக்கப்பட்ட சிங்களச் சோதனைகளில் ஓர் உத்தியோகத்தர் சித்தியெய்தவில்லை யாஞல், அவரது நியமனம் நிறுத்தப்படுவதற்கேதுவா கும்.

குறிப்பு.—"புதிதாகச் சேர்ந்தோர்" என்னும் பதம், அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக, 1956 ஆம் ஆண்டு செத் தெம்பர் மாதம் 24 ஆந் தேதியன்றோ அதற்குப் பின்னரோ அர சாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ஆந் தேதிய 700 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர் எனக் கருதப்படாத உத்தியோகத்தர் களைக் குறிக்கும்.

(vi) இப் பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நியமிக்கப் படும் சித்தியெய்தும் பரீட்சார்த்திகள், அவர்களது நிய மனங்களில் உறுதிப்படுத்தப்படமுன்னர்,

(i) நிதி ஒழுங்கு விதிகள்,

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், கரும முறைக் கைந்நூல்.

என்பனவற்றில் ஒரு சோதனையில் சித்தியடையுமாறு வேண்டப் படுவர்.

(vii) இப்பதவிக்குரிய வேதனத் திட்டம், ஆண்டுக்கு 6,720 ரூபாவில் தொடங்கி, 360 ரூபாவைக் கொண்ட பன்னி ரண்டு ஆண்டு வேதனவேற்றங்களாலுயர்ந்து, ஆண்டுக்கு 11,040 ரூபா வரை செல்வதாகும். (ஆண்டுக்கு 8,520 ரூபாவுக்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு) பிற சேவை நியதிகளும், நிபந்தனைகளும், அவ்வப்பொழுது திருத்தப்பட்டவாறுன, 1971 ஆம் ஆண்டு யூன் மாதம் 4 ஆந் தேதிய இலங்கை அரசாங்கச் செய்திமடலில் வெளி யிடப்பட்ட, அரசாங்கக் கணக்காளர் சேவை பற்றிய பிரமாணக் குறிப்பில் விதிக்கப்பட்டுள்ளவாறுமாகும்.

12. இச்செய்திமடலின் பகுதி I, பிரிவு (II) இன் தொடக்கத் தில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக் குச் செய்யப்படும் நியமனங்களுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

பி. எச். சிறிவர்தனு,
செயலாளர்,
அரசாங்க நிருவாக உள்ளூராட்சி உண்ணுட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
டொறிங்டன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 மே மாதம் 28 ந் திகதி.

### பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சிவியக்காலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானுல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறு மொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்க கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக்கடதாசிக்கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களோ குறிப்புக்களோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும், அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனுல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுது மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஓர் பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

*பரீட்சார்த்திகளுக்கு—*

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ளவேண்டும். அல்லாவிட்டால் குறிபிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைகுத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனல் பரீட்சை முடியு முன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறுக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர். அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இருபக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்ரோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரிட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவருன இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களை யிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானல் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேடும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்கமேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள், தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினல் உமது விடைத்தாள் காணமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடமோ பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினல் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொ. ப்ரேமரத்ன,
பரீட்சாதிகாரி.

பரீட்சைப் பகுதி,
மலே வீதி, கொழும்பு-2.

6-306—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

**கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை—1973**

கணக்காளர் சேவையின் IV ஆம் வகுப்புக்கு நியமிக்கப்படுவதற்காய அவ்வறிவிப்பில் தரப்பட்டுள்ள வேண்டிய தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் முறை :—

(அ) அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை 1973, யூன் 25 ஆந் தேதிவரை பரீட்சை ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இப்படிவங்களை அஞ்சலில் பெறவேண்டின் சொந்த முகவரியெழுதப்பட்ட, முத்திரையொட்டப்படாத, 9 அங்குலம் × 4 அங்குலம் அளவினதான கடித உறையொன்று பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இக் கடித உறையின் மேல் மூலையில் "விண்ணப்பப்படிவம்—கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்னும் தலைப்பு தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். ஒரு பரீட்சார்த்திக்கு ஒரு படிவத்திற்கு மேல் வழங்கப்படமாட்டாது.

(ஆ) இப்பரீட்சைக்குரிய கட்டணம் 50 ரூபாவாகும். விண்ணப்பப் படிவத்தில் தரப்பட்டுள்ள கூண்டில் 50 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு அதன் மேல் பரீட்சார்த்தியின் கையொப்பத்தையும் தேதியையும் இடுவதன் மூலம் முறையாக அது அழிக்கப்படல் வேண்டும்.

இப்பரீட்சைக்குச் செலுத்தப்படும் கட்டணம் எக்காரணம் பற்றியும் முற்ருகவோ ஒரு பகுதியாகவோ மீளக் கொடுக்கப்படமாட்டாது.

(இ) விண்ணப்பங்களை நிரப்பி, அவற்றை பதிவு அஞ்சலில் கொழும்பு 2, அ. பெ. இல. 1503, பரீட்சை ஆணையாளர் என்னும் முகவரியை 1973 யூலை மாதம் 8 ஆந் தேதிக்கு முன்னர் சென்றடையுமாறு அனுப்புதல் வேண்டும். அத்தேதிக்குப் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் தள்ளப்படும். விண்ணப்பக்காரர்கள் தமது விண்ணப்பங்களை, முடிவுத் தேதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளரைச் சென்றடையத் தக்கதாகத் தமது திணைக்களத் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். பரீட்சை ஆணையாளருக்கோ அவரின் திணைக்கள உத்தியோகத்தர் எவருக்குமோ தனிப்பட்ட முறையில் விண்ணப்பங்கள் அனுப்பப்படலாகாது. விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் மேற்பக்க மூலையில் பரீட்சையின் பெயர், அதாவது, "கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பதற்காய மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்பது தெளிவாக எழுதப்படுதல் வேண்டும்.

(ஈ) ஒரு விண்ணப்பப்பத்திரமோ அல்லது அது சம்பந்தமான கடிதமோ அஞ்சற் போக்குவரத்திற் காணமற் போய்விட்டது அல்லது தாமதப்பட்டுள்ளது என்னும் முறைப்பாடு எதுவும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைக் கடைசித் தேதிவரை தாமதப்படுத்துவராயின் இது அவர்கள் பொறுப்பாகும்.

(உ) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்துள்ள அஞ்சல் அட்டையில் பரீட்சார்த்திகள் தங்கள் பெயரையும் முகவரியையும் மாத்திரம் எழுதுதல் வேண்டும். இது விண்ணப்பம் பெற்றுக்கொண்டமையை ஒப்புக்கொள்வதற்கு உபயோகிக்கப்படும். அதற்கிணங்கத் தமது பெயரையும் முகவரியையும் கூருத பரீட்சார்த்திகளின் விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டமை ஒப்புக்கொள்ளப்பட

மாட்டா. தமது பெயரையும் முகவரியையும் கூறிய பரீட்சார்த்தி யோருவர், விண்ணப்ப முடிவு தேதியிலிருந்து 3 கிழமைக்குள் ஒப்புக்கோடலைப் பெருவிடின், உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ்வேற்பாட்டுக்கு இணங்கி ஒழுகத் தவறினுல் பரீட்சார்த்தி பரீட்சையெடுக்கும் உரிமையை இழக்க நேரிடும்.

3. பரீட்சைக்கு அனுமதி :—

(i) பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகள் யாவர்க்கும் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள், அப் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குத் தங்கள் அனுமதிப்பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அத்தகைய பத்திரங்களைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

பரீட்சார்த்திகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சையை எடுத்தல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி தமக்கு ஒதுக்கப்பட்டதல்லாத பிறிதொரு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை நாளன்று தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும். இவ்வறிவிப்பின் முடிவில் பரீட்சார்த்திகள் யாவரும் கவனிக்க வேண்டிய விதிகள் வேருக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைத் தேதிக்கு குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதிப்பத்திரத்தைப் பெருவிடின், அவர் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருக்கு, கொழும்பு 2, அ. பெ இல. 1503, பரீட்சை ஆணையாளர் (தந்தி முகவரி "எக்சாம்ஸ்" கொழும்பு) என்னும் முகவரிக்கு அறிவித்தல் வேண்டும். அனுமதிப்பத்திரத்தைத் தான் பெறவில்லையெனப் பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கும்போது, பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் ;

(2) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;

(3) முகவரி ;

(4) விண்ணப்பம் அனுப்பிய தேதியும் பதிவிலக்கமும் அஞ்சல் அலுவலகமும்.

(ii) பரீட்சைக்கு அனுமதியளிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக்கொண்டதாகாது. எனினும், பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணிபின்படி பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சையை எடுப்பதற்குத் தற்காலிக அனுமதி அளிக்கலாம். அத்தகைய பரீட்சார்த்தி பரீட்சை எடுத்தமை, பின்னர் ஒன்றில் உறுதிப்படுத்தப்படும் அல்லது நீக்கப்படும்.

4. வெற்றுப் பதவிகளின் எண்ணிக்கை :—

(அ) இப்பரீட்சையின் மூலம் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதியினல் தீர்மானிக்கப்படும். பொது மக்கள் நலனுக்கு அவசியமென அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி கருதினுல், எந்தவொரு வெற்றுப்பதவியையேனும் அல்லது எல்லா வெற்றுப் பதவிகளையேனும் நிரப்பாது விடும் உரிமையை அல்லது அவசிய மேற்படின் விதிக்கப்பட்ட எண்ணிக்கைக்கு மேற்பட்ட நியமனங்களைச் செய்யும் உரிமையை அது தன்மாட்டுக் கொண்டுள்ளார்.

(ஆ) பொது மக்கள் நன்மைக்கு அவசியமானதென அரசாங்க நிருவாக பணிப்பாளர் அதிபதி கருதுவாராயின் இப் பரீட்சையை நடத்தாமல் விட்டுவிடும் உரிமை அவருக்கு உண்டு. அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதி அவசியமெனக் கருதினுல் பரீட்சையைத் தள்ளிப்போடலாம்.

(இ) நியமனம் செய்யப்படும் காலத்தில் நடைமுறையிலிருக்கும் அரச கரும மொழி ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் கீழ் அத்தகைய நியமனங்களுக்குத் தகுதியற்றவர்களாகக் கருதப்படும் சித்திபெற்ற பரீட்சார்த்திகளுள் ஒருவரையேனும் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவரையேனும் அங்ஙனம் நியமிக்காது விடும் உரிமை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்கு உண்டு.

5. தகைமை நிபந்தனைகள் :—

ஒவ்வொரு விண்ணப்பகாரரும் பின்வரும் தகைமையுடையவர்களாயிருத்தல் வேண்டும் :—

குறிப்பு.—இப்பரீட்சையின் பெறுபேறுகளின் பேரில் நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களில் 20 சத வீதத்திற்கு மேற்படாத வெற்றிடங்கள் மட்டுமே பெண் பரீட்சார்த்திகளால் நிரப்பப்படக்கூடுமென்ற காப்புரைக்கமைய, விதிக்கப்பட்ட தகைமைகளையுடைய பெண் பரீட்சார்த்திகளும் இப்பரீட்சையில் போட்டியிடுவதற்குத் தகவுடையவராவர்.

(அ) அவர்/அவள் இலங்கையராயிருத்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் பரம்பரையாக அல்லது பதிவு வழியாக இலங்கைக் குடியாயிருப்பவராகும்.

(ஆ) அவர்/அவள் நல்லொழுக்கமுடையவராகவும், உடல் அமைப்பு வாய்ந்தவராகவும், இலங்கையின் எப்பாகத்திலும் சேவை செய்யத்தக்க உடல் நலம் வாய்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) பின்வரும் உத்தியோகத்தர்களே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

(i) இணைந்த சேவையில் அல்லது திணைக்களத் தரத்தில் தொடக்க வேதனம் ரூபா 3,000/- (திரட்டியது) வைக் கொண்டதும் 1973 யூலை 8 ஆந் தேதி அரச சேவையில் 10 வருடங்களைப் பூர்த்திசெய்தும் நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) அரச சேவையில் 1973 யூலை 8 ஆந் தேதி 5 வருட சேவையைப் பூர்த்தி செய்து, நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்டு அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திற் பட்டம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) அரச சேவையில் 1973 யூலை 8 ஆந் தேதி 5 வருட சேவையைப் பூர்த்தி செய்து நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட பின்வரும் ஓரளவு உயர்தொழிற் தகைமைபெற்ற உத்தியோகத்தர்கள்.

(அ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையிற் தேறியிருத்தல் வேண்டும் ; அல்லது

(ஆ) ஆக்கச் செலவு வேலைக்கணக்காளர் நிறுவகத்தின் (ஐ.சி.டபிள்யு.ஏ.) (யூ. கே.) பரீட்சைகள் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகளில் தேறியிருத்தல் வேண்டும். அல்லது,

(இ) சான்றுபெற்ற கூட்டிணைப்புக் கணக்காளர் அவையின் (ஏ.சி.சி.ஏ.) (யூ. கே.) பரீட்சைகளின் I ஆம், II ஆம், III ஆம் பிரிவுகளில் தேறியிருத்தல் வேண்டும். அல்லது,

(ஈ) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் (டிப்புளோமா) பெற்றவராயிருத்தல் வேண்டும். அல்லது,

(உ) பட்டயம் பெற்ற செயலாளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையிற் தேறியிருத்தல் வேண்டும். அல்லது,

(ஊ) ஆக்கச் செலவு தொழில்நுட்ப கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சையிற் தேறியிருத்தல் வேண்டும்.

(ix) 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆந் தேதியில் ஆண்டுக்கு 5,304 ரூபாவுக்குத் குறையாத திரட்டிய வேதனம் பெறும், உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆய்வு உத்தியோகத்தர் ஒருவராயிருத்தல் வேண்டும். அல்லது,

அல்லது

(x) அஞ்சல், தொலைத் தொடர்புத் திணைக்களத்தின் அஞ்சல் கணக்குப் பரீட்சகர் அல்லது ஆய்வுச் சோதனைக்காரர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(xi) உண்ணாட்டு அரசிறைத் திணைக்களத்தின் பரீட்சகர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

அல்லது

(xii) 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆந் தேதியில் ஆண்டுக்கு 5,304 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறும், கூட்டுறவுத் திணைக்களத்தின் சோதனைகாரர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(xiii) 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதியில் ஆண்டுக்கு 5,304 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறும் விலைமதிப்புத் திணைக்களத்தின் சோதனைகாரர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(xiv) 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆந் தேதியில் ஆண்டுக்கு 5,304 ரூபாவுக்குக் குறையாத திரட்டிய வேதனம் பெறும் அரசாங்க சிறுப்பர் சேவையின் II ஆந் தரத்தின் உறுப்பினர் ஒருவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

(xv) பின்வரும் ஓரளவு உயர்தொழிற்றகைமைகளுள் ஏதேனுமொன்றை உடைய ஒருவர்—

(அ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இடைநிலைப் பரீட்சை ;

அல்லது

(ஆ) ஆக்கச் செலவு, வேலைகள் கணக்காளர் நிறுவகத்தின் (ஐ. சி. டபிள்யூ. ஏ.) (யூ. கே.) பரீட்சைகளின் I ஆம், II ஆம், III ஆம் பகுதிகள் ;

அல்லது

(இ) சான்றுபெற்ற கூட்டிணைப்புக் கணக்காளர் அவையின் (ஏ. சி. சி. ஏ.) (யூ. கே.) பரீட்சையின் I ஆம், II ஆம், III ஆம் பிரிவுகள் ;

அல்லது

(ஈ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுச் சான்றிதழ் (டிப்ளோமா), ஆயினும் அவர் ஏலவே அரசாங்க சேவையில் உள்ளவராயும், பதவியில் உறுதிப்படுத்தப் பெற்றவராயும் 1972 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆந் தேதியன்று 5 ஆண்டுக் காலத்திற்குக் குறையாத சேவை ஆற்றியவராயும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு.—மேலே 5 (இ) (iii) ஆம் பந்தியின் கீழ் இப்பரீட்சையில் போட்டியிடும் பரீட்சார்த்திகள், தமது கல்வி, உயர் தொழில் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களையும் பிற சாதனங்களையும் பரீட்சை ஆணையாளர் அனுப்புமாறு அழைத்தவுடன் அனுப்புவதற்கேதுவாக ஆயத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

6. அடையாளச் சீட்டுகள்.—

பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்தில் மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்த நோக்கத்திற்காகப் பின்வரும் சாதனங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக் கொள்ளப்படும் :—

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு ;

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன்னதாக மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்) ;

(இ) ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது அரசாங்க யாக்கத்தின் அல்லது வேறு நியதிச் சட்டமுறையான தாபனத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சைத் தேதிக்கு முன்னதாக மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சி பத்திரம் அல்லது உத்தரவுப்பத்திரம் அல்லது பிற சாதனம்.

(ஈ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை.

(உ) அனுமதிச்சீட்டை அத்தாட்சிப் படுத்தல் தகவுடைய உத்தியோகத்தரினால், கடவுச்சீட்டு (பாஸ்போட்) அளவுடைய புகைப்படத்தின் மறுபக்கத்தில் பின்வருமாறு உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படம்.

மறுபக்கத்திலுள்ள புகைப்படம் இங்கு ஒப்பமிட்டுள்ளவராகிய ..........................(பரீட்சார்த்தியின் முழுப்பெயர்) அவர்களுடையதென உறுதிப்படுத்துகின்றேன்.

————————.

பரீட்சார்த்தி சார்பில் வழங்கப்பட்டது.

————————,
பரீட்சார்த்தியின் ஒப்பத்தை அத்தாட்சிப் படுத்துபவரின் ஒப்பம்.

————————,
————————,
பெயரும் பதவிப் பெயரும்.

திகதி :————.

(அத்தாட்சிப்படுத்தப்பட்ட இப்புகைப்படம் மேற்பார்வையாளரினால் வைத்திருக்கப்படல் வேண்டும்)

மேல் கூறப்பட்ட சாதனங்களில் யாதேனுமொன்றைப் பரீட்சார்த்தி சமர்ப்பிக்கத் தவறின் அவரின் பரீட்சார்த்தத் தன்மை தற்காலிக ஏற்பாட்டிற்கமையும். அப்படிப்பட்ட பரீட்சார்த்தித் தன்மை பரீட்சையாளரின் தற்றுணிபினால் நிராகரிக்கப்படக் கூடும்.

7. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய தண்டம்.—இப்பரீட்சைக்குரிய ஒழுங்குவிதிகளின்படி பரீட்சார்த்தியொருவர், தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்போதோ, பரீசைக்குப் பின்னரோ, எந்நிலையிலாவது அவரைப் பரீட்சார்த்தியென்று அனுமதித்தவை தள்ளுபடி செய்வதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்குட்பட பொய்யானவையென காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவார்.

8. தெரிவுகள் செய்யும் முறை.—இப் பரீட்சை, (1) எழுத்துப் பரீட்சை, (2) வாய்மொழிப் பரீட்சை என இரு பகுதிகளாக நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை, 1973 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 16 ஆம், 17 ஆம், 18 ஆம் தேதிகளில் கொழும்பில் நடாத்தப்படும்.

எழுத்துப் பரீட்சைக்குப் பின்னர் விண்ணப்பகாரர்களுக்கு அறிவிக்கப்படும் தேதியில் வாய்மொழிப் பரீட்சை நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சையில் போதிய அளவான உயர் தரத்தையடையும் விண்ணப்பகாரர்களுக்கு மட்டும் இப்பரீட்சை நடாத்தப்படும்.

9. பரீட்சை மொழி.—எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழியில் நடாத்தப்படும் இப்பரீட்சை ஆறு வினாப்பத்திரங்களைக் கொண்டது :

(1) கணக்குப் பதிவியலும் கணக்கியலும்,
(2) கணக்காய்வு,
(3) வாணிப கணிதம்,
(4) ஆக்கச் செலவு கணக்கியல்,
(5) பொருளியலும் பொது நிதியும்,
(6) அரசாங்க நிதி ஒழுங்கு விதிகளும் நிதி நடைமுறையும்.

குறிப்பு.—(1) ஏலவே அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள், அத்தகைய சேவையில் சேருவதற்குரிய தகைமைப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்துச் சித்தியெய்தினர்களோ, அம் மொழியிலேயே எல்லா வினாப்பத்திரங்களுக்கும் விடையெழுதுதல் வேண்டும். எனினும், மேலே குறிப்பிட்டுள்ள தகைமைப் பரீட்சையை சிங்களமல்லாத வேறேதேனும் மொழியில் எடுத்துச் சித்தியெய்தியிருந்தால் மட்டும் அவர்கள் தமது விருப்பத்தின் பேரில் இவ்வினாப் பத்திரங்களுள் ஒன்றுக்கோ எல்லாவற்றிற்குமோ அரசகரும மொழியில் (சிங்களத்தில்) விடையெழுதலாம் ;

(2) இவ்வறிவிப்பின் 5 (இ) பந்தியின் (iii) ஆம் உபபந்தியின் நியதிகளின் பிரகாரம் தகுதிபெறும் பரீட்சார்த்திகள் ; இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகவளிக்கும் தகைமைப் பரீட்சையை எம்மொழியில் எடுத்துச் சித்தியடைந்தார்களோ அம் மொழியில் அல்லது அவர்கள் அவ்வாறு விரும்பினால் அரசகரும மொழியில் (சிங்களத்தில்) இப்பத்திரங்களுக்கு விடையெழுதல் வேண்டும் ;

(3) விண்ணப்பம் முடிவு தேதிக்குப் பின்னர் பரீட்சார்த்திகள் பரீட்சை எடுக்கும் மொழியை மாற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

10. பரீட்சைத் திட்டம்.—பரீட்சைத் திட்டம் பின்வருமாறு ஆகும்.

| | | புள்ளிகள் |
|---|---|---|
| வினாத்தாள் 1—கணக்குப்பதிவியலும் கணக்கியதும் ... 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | | 100 |
| வினாத்தாள் 2—கணக்காய்வு ... 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | ... | 100 |
| வினாத்தாள் 3—வாணிப கணிதம் ... 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | ... | 100 |
| வினாத்தாள் 4—ஆக்கச் செலவு கணக்கியல் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | ... | 100 |
| வினாத்தாள் 5—பொருளியலும் பொதுநிதியும் 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | ... | 100 |
| வினாத்தாள் 6—அரசாங்க நிதி ஒழுங்குவிதிகளும் நிதி நடைமுறையும் ... 3 மணித்தியாலத்திற்கான எழுத்துமூல விடைக்கான ஒரு வினாத்தாள் | ... | 10Ɔ |
| 7—வாய்மொழிப் பரீட்சை ... | ... | 100 |

இப்பரீட்சை நடாத்தும் சபைக்கு, பரீட்சார்த்திகள் எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் கிடைக்கத்தக்கதாகவிரா, பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவதற்கு ஒவ்வொரு வினாத்தாளுக்குரிய புள்ளிகளில் 45% ஐப் பெறுதல் வேண்டும்.

11. **வேலைக்கமர்த்தும் நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) பதவிகள் நிரந்தரமானவையும் ஓய்வூதியத்துக்குரியவையுமாகும்.

(ii) சித்தியடையும் பரீட்சார்த்திகள் இடமாற்றத்துக்காளாவார், அத்துடன் அவர்கள் இலங்கையில் எந்த நிலையத்திற்கேனும் அனுப்பப்படலாம்.

(iii) இப்பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகள், நியமிக்கப்படும் தேதியிலிருந்து 3 ஆண்டுகளுக்குத் தகுதிகாண் நிலையில் நியமிக்கப்படுவர். அவர்கள், முதலில் சகாய நிதி அடிப்படையில் நியமிக்கப்பட்டு, நியமிக்கப்படுவர். எப்படியாயினும் அவர்கள் ஓய்வூதியத்திற்குரிய பதவிகளை வகித்திருப்பின் அச்சலுகைகளைத் தொடர்ந்தும் பெற அனுமதிக்கப்படுவர்.

(iv) சித்தியடையும் பரீட்சார்த்திகள் தாம், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக இப்பொழுதுள்ள ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது வருங்காலத்தில் புகுத்தப்படக்கூடியனவான ஏதேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமைந்து ஒழுகுவர் என்னும் நிபந்தனைக்கு இணங்குதல் வேண்டும்.

(v) அரசகரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக "புதிதாகச் சேர்ந்தோர்" எனக் கருதப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், தமது தகுதிகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் தேர்ச்சி பெறல் வேண்டும். தகுதிகாண் கால முடிவில் இப்பரீட்சார்த்திகள் உறுதிப்படுத்துவதானது, அவர்களின் திருப்திகரமான சேவை, நடத்தை என்பனவற்றையும் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனைகளில் சித்தியடைதலையும் பொறுத்திருக்கும்.

குறிப்பு.—அரச்கரும மொழிக் கொள்கை நோக்கத்திற்காக, "புதிதாகச் சேர்ந்தோர்" என்னும் பதம், 1956 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் தேதியன்றோ அதற்குப் பின்னரோ அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்பட்டு, 1966 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ஆந் தேதிய 700 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னர் சேர்ந்த உத்தியோகத்தர் எனக் கருதப்படாத உத்தியோகத்தர்களைக் குறிக்கும்.

(vi) **சம்பளத் திட்டம்.**—ஆண்டுக்கு 6,720 ரூபாவில் தொடங்கி, 360 ரூபாவைக் கொண்ட பன்னிரண்டு ஆண்டு ஏற்றங்களாலுயர்ந்து, ஆண்டுக்கு 11,040 ரூபாவரை செல்வதாகும். (ஆண்டுக்கு 8,520 ரூபாவுக்கு முன் வினைத்திறமைகாண் தடையுண்டு).

12. இச்செய்திமடலின் பகுதி I : தொகுதி (IIஅ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்குச் செய்யப்படும் நியமனங்களுக்கு ஏற்புடையனவான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

பீ. எச். சிறிவர்த்தன,
செயலாளர்,
நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973, மே மாதம் 28 ஆந் தேதி.

### பரீட்சைப் பகுதி, இலங்கை

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி, கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்பவர்.

(iii) ஒரு வருடத்துக்கோ அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியினத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதிப்பையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடைத்யெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்தி லிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்த கைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ் விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண் டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை மேற்பார்வையாளர் பரீட்சை மண்ட பத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத் தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப் படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பரு மட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கிறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப் படாத விடைகளை வெட்டிவிடுக. இவ் விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளி ருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிப் பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும் பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற் றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல் லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம் குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப்பெட் டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலிய வற்றை கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக்கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற் றையோ வைத்திருக்கக்கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப் போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வை யாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தி யும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்ட தாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும், அவசியமான சந்தர்ப்பங்க ளில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்தி லிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றி லிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச் சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட் சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்கக் எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டப்டி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒரு வருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறு திப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்தி கள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல் லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கரு தப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு—**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி கீழ்வரும் விதி களைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியா விடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசா ரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்று தற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிட மிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிரா கரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட் டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான் றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாக பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற் றுத்தாள், தனனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்க மாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக் கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். உமக்கெனக் கொடு படாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப் படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உப கரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென் சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்தி கள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத் தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை எழுதும் தாளின் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற் றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின் னர் ஒரு கோடு கிறப்பட வேண்டும் அல்லது சில வெற் றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோ டொன்று நெருக்கி எழுதவேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக் காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங் கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரி யான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழி களின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப் படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப் படத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கிறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்துக் மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையி லன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக் காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2.

6-307—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

---

1/60/28 (ஜி)

### தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காய் பரீட்சை (தமிழ்)—ஓகஸ்ட் 1973

**பரீட்சைத் திகதி :**—தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காய போட்டிப் பரீட்சையொன்று தமிழ்த் தட்டெழுத்தில் தேர்ச்சியுடைய இருபாலாருக்குமாக பரீட்சை ஆணையாளரால் 1973 ஓகஸ்ட் 04 ஆந் திகதி பின்வரும் பரீட்சை ஸ்தானங்களில் நடாத்தப்படும்.

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் | — | கொழும்பு |
| மத்திய மாகாணம் | — | கண்டி |
| தென் மாகாணம் | — | காலி |
| வட மாகாணம் | — | யாழ்ப்பாணம், வவுனியா |
| கிழ் மாகாணம் | — | மட்டக்களப்பு, திருகோணமலை |
| வடமேல் மாகாணம் | — | குருநாகல் |
| வடமத்திய மாகாணம் | — | அநுராதபுரம் |
| ஊவா மாகாணம் | — | பதுளை |
| சப்ரகமுவ மாகாணம் | — | இரத்தினபுரி |

போதிய பரீட்சார்த்திகள் இல்லாத பரீட்சை ஸ்தானம் நீக்கப்படும்.

**2. வெற்றிடங்களின் தொகை :**—தெரிவு செய்யப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்கள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படும்.

**3. (i) சேவைக்குரிய நிபந்தனைகள் :**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் நியமன திகதியிலிருந்து மூன்றுண்டு தகுதிகாண் காலத்துக்கு நியமிக்கப்படுவர். இப்பதவிகள் ஓய்வூதியவுரித்துடைமை அற்றவை.

(ii) இப்பரீட்சையின் பெறுபேறுகளிலிருந்து தட்டெழுத்தாளர் சேவைக்கு நியமிக்கப்படும் பரீட்சார்த்திகள் இத்தீவின் எப் பாகத்திற்கும் இடமாற்றம் செய்யக் கூடியவர்.

(iii) தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iv) **படிகள் :**—படிகள் சேவைபற்றிய நிபந்தனைகளுக்கு அரசாங்க வர்த்தமானியின் பகுதி (I) தொகுதி (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்படும் "அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்க்க".

(v) பொது எழுதுநர் சேவையில் ஒரு பாகமாக தட்டெழுத்தாளர் சேவை அமையாது. ஆகவே தட்டெழுத்தாளர் சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் பொது எழுதுநர் சேவையின் நிறைவேற்று எழுதுநர் வகுப்புக்குப் பதவி உயர்வுக்காய பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆயினும் தமது தட்டெழுத்தாளர் சேவை நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் சேவையான தகுதிகளைப் பெற்றிருப்பின் தட்டெழுத்தாளர் சேவையின் உயர்தரத்திற்குப் பதவி உயர்வுக்காய பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் வயது, கல்வித் தகைமைகள் கவனிக்கப்படாமல் மாற்றத்துக்குரிய சுருக்கெழுத்தாளர் சேவையின் சாதாரண தரத்திற் சேர்த்தற்காய பரீட்சைக்குத் தோற்றுவதற்கும் அனுமதிக்கப்படுவர்.

(vi) இப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி நியமிக்கப்பட்டவர்கள் தட்டச்சிடுவதில் குறைந்தது நிமிடத்துக்கு 20 சொற்கெதியாவது உடையவரயிருக்க வேண்டும்.

தாம் நியமனம் பெற்ற அலுவலகத்தில் தாம் பயின்ற மாதிரி தட்டெழுத்துப் பொறிகள் இல்லாவிட்டால் அவ்வலுவலகத்திலுள்ள தட்டெழுத்துப் பொறிகளில் தட்டச்சிடுவதற்குத் தேர்ச்சி பெறுவதற்காக அரசாங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள குறுகிய கால பயிற்சி நெறியைப் பின்பற்றித் தேர்ச்சி பெற வேண்டும்.

**4. வேதனத் திட்டம் :**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள், ஆண்டொன்றுக்கு ரூபா 3,000/- விருந்து வருடந்தோறும் ரூபா 90/- வீதம் ரூபா 5,160- வரை உயரும் திரட்டிய வேதனத்திட்டத்தில் தட்டெழுத்தாளர் சேவையில் வைக்கப்படுவர். இவ்வேதனத் திட்டத்தில் ரூபா 3,810 க்கும் ரூபா 4,530 க்கும் முன்பு வினைத்திறமை காண் தடைகளுண்டு.

5. **தகுதித் திறன்—பொது நிபந்தனைகள் :**—பரீட்சார்த்திகள்,

(i) நற்குணமுடையவராயிருக்க வேண்டும்.

(ii) இலங்கைப் பிரஜையாயிருக்க வேண்டும்.

(iii) பின்வரும் தராதரப் பத்திரங்களிலொன்றையேனும் உடையவராயிருத்தல் வேண்டும்.

(அ) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம். தமிழ்ப் பாஷை உட்பட 4 திறமைச் சித்திகள் பெற்றவராயிருத்தல் வேண்டும்.
அல்லது,

(ஆ) இலங்கைக் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) ப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு தோற்றி ஒரு தடவையில் 5 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியெய்தி, 6 பாடங்களுக்குக் குறையாமல் சித்தியடைந்திருக்க வேண்டும். இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு தோற்றி தமிழ்ப்பாஷையில் திறமைச் சித்தி உட்பட 4 திறமைச் சித்திகள் பெற்றவர், எண்கணிதம் /தூயகணிதம்/ஆரம்ப கணிதம்/வர்த்தக கணிதம் ஆகியவற்றிலொன்றில் சித்திபெற்றவராயிருக்க வேண்டும்.
அல்லது,

(இ) கல்வித் திணைக்கள தமிழ் வர்த்தகச் சான்றிதழ்.
அல்லது,

(ஈ) கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரத்துடன் அல்லது கல்வித் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையினால் வழங்கப்பட்ட கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் பின்வரும் கல்விச் சான்றிதழ்களுள் யாதேனும் ஒன்று பெற்றிருத்தல் வேண்டும்.

(i) இலண்டன் வர்த்தகமன்றத்தினால், இலங்கைத் திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் வர்த்தகக் கல்விச் சான்றிதழ் (பொது வர்த்தகம் அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பிரிவு) (விசேட) அல்லது உயர்வர்த்தக கல்விச் சான்றிதழ் (பொது வர்த்தகம் அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளர் பிரிவு) (விசேட).

(ii) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் வர்த்தகச் சான்றிதழ் அல்லது உயர் வர்த்தகச் சான்றிதழ் (கணக்குப் பதிவாளருக்குரியது அல்லது சுருக்கெழுத்து தட்டெழுத்தாளருக்குரியது).

(iv) 1973 யூன் மாதம் 25 ஆந் திகதியன்று பரீட்சாத்திகள் 17 வயதுக்குக் குறையாதவர்களாயும் 35 வயதுக்கு மேற்படாதவர்களாயும் இருக்க வேண்டும்.

குறிப்பு :—மேற்குறிப்பிட்ட பரீட்சைகளின் முடிவுகள் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு தேதிக்கு முன்னர் கிடைக்கப்பெறுதிருப்பின். அவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

6. (1) அரச சேவையில் நிரந்தர உத்தியோகத்தர்கள் :

(அ) அரச சேவையில் பதவிகளை வகிக்கும் நிரந்தர உத்தியோகத்தர்கள் 5 ஆம் பந்தி பிரிவு (3) இன்படி தகவற்றவர்களாயின் 1973.06.25 ஆந் திகதி 45 வயதிற்குட்பட்டவராயின் பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையவராவர்.

(ஆ) அவர்கள் தட்டெழுத்தாளர் சேவைக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவர்களைச் சேவையிலிருந்து விடுவிக்கத் திணைக்களத் தலைவர்கள் தயாராகவிருத்தலும் வேண்டும்.

(ii) அரச சேவையில் இருக்கும் தற்காலிக உத்தியோகத்தர்கள் 1973.06.25 ஆந் தேதி 45 வயதிற்குட்பட்ட தற்காலிக சுருக்கெழுத்தாளர்களும், தட்டெழுத்தாளர்களும் எழுதுநர்களும் 5 ஆம் பந்தி பிரிவு (3) இற் கூறப்பட்ட கல்வித் தகைமைகள் புறநீங்கலாக இப் பரீட்சைக்குத் தோற்றத் தகவுடையர்.

(iii) அரச சேவையில் இருக்கும் அமய உத்தியோகத்தர்கள் : 5 ம் பந்தி பிரிவு 3 இற் கூறப்பட்ட கல்வித் தகைமைகளையுடைய, 1973.06.25 ஆந் திகதி குறைந்த பட்சம் 1 வருட சேவையைப் பூர்த்தி செய்த அமய அடிப்படையில் இருக்கும் உத்தியோகத்தர்களும் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

7. (1) **விண்ணப்பங்கள்.**—இவ்வறிவித்தலினிறுதியில் மாதிரி விண்ணப்பப்படிவமொன்று தரப்பட்டுள்ளது. மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய முழுத்தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்படவேண்டும். இந்நோக்கத்திற்காக ஒரு தாள் மாத்திரமே உபயோகிக்கப்படவேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் பதிவு அஞ்சல் மூலம் கொழும்பு 2, த. பெ. இல. 1503, பரீட்சை ஆணையாளருக்கு 1973 யூன் மாதம் 25 ஆந் திகதியோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்கதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். இத்திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அனுப்பும் கடித உறையின் இடப்பக்க மேல்மூலையில், பரீட்சையின் பெயரும் (பரீட்சார்த்தி தேர்ந்தெடுத்துள்ள பரீட்சை ஸ்தானமும்) தெளிவாக எழுதப்பட வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் 40 ரூபா பெறுமதியுள்ள முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றின்மேல் பரீட்சார்த்தியின் கையொப்பத்தையும் தேதியையும் இடுவதன் மூலம் அவை முறைப்படி செல்லுபடியாதனவாக ஆக்கப்படுதல் வேண்டும். அரச சேவைகளில் நிரந்தர, இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் 20 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றின் மேல் அவரது கையொப்பமும் திகதியும் இடப்பட்டு செல்லுபடியாகாதனவாக ஆக்கப்படுதல் வேண்டும். (ஆயினும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைமையற்ற அரச சேவை உத்தியோகத்தர்கள் யாவரும் 40 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டுதல் வேண்டும்).

(iv) அரசாங்க சேவையிலுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர் மூலமாக அனுப்பவேண்டும். பந்தி 6 வின் பிரகாரம் தகமை பெறும் பரீட்சார்த்திகள் தாம் கடைசியாகச் சேவை செய்த திணைக்களத்தின் தலைவர் மூலமாக விண்ணப்பங்களை அனுப்பவேண்டும். இவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் தகைமை நீக்கஞ்செய்யப்படும். 1973 யூன் 25 ஆந் தேதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளரை அடையக் கூடியதாக முன் கூட்டியே விண்ணப்பங்களை அனுப்பிவைக்கும்படி தமது திணைக்களத் தலைவர்களைக் கேட்டுக் கொள்ளும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள்.

விண்ணப்பங்கள் பரீட்சை ஆணையாளருக்கோ அல்லது அத் திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கோ நேராக அனுப்பப்படலாகாது.

(v) விண்ணப்பகாரரின் கையொப்பம் அத்தாட்சிப் படுத்துவதற்கு அதிகாரம் பெற்றுள்ள ஒருவரால் அத்தாட்சிப்படுத்துதல் வேண்டும். அவ்வாறு அதிகாரம் பெற்றுள்ளோர் சமாதான நீதியரசர், சத்திய ஆணையாளர், வழக்கறிஞர், பிரசித்த நொத்தாரிசு, அரசாங்க பாடசாலையில் அல்லது பணிப்பாளரின் முகாமையிலுள்ள பாடசாலை அதிபர், கடற்படையை அல்லது வான்படையை அல்லது தரைப் படையைச் சேர்ந்த ஆணைபெற்ற உத்தியோகத்தர், ஆண்டுக்கு 4,800 ரூபாவோ அதற்கு மேலோ திரட்டிய ஆண்டு வேதனம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர், பௌத்த கோயில் பிரதம மடாதிபதி அல்லது பிரதமகுரு அல்லது வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பாகவுள்ள பிறசமயக் குரு அல்லது அத்தலத்தில் உயர்பதவி வகிக்கும் பிறசமயக் குருக்களில் ஒருவர் ஆகியோராவர்.

8. **பரீட்சைக்கு அனுமதி.**—பரீட்சை ஆணையாளர் தாம் ஏற்றுக் கொண்ட விண்ணப்பங்களுக்குரிய பரீட்சார்த்திகளுக்கெல்லாம் அனுமதிப் பத்திரங்கள் வழங்குவார். பரீட்சைக்குத் தோன்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை மேற்பார்வையாளருக்குத் தங்கள் அனுமதிப் பத்திரங்களைக் காட்டுதல் வேண்டும். அதைக் காட்டத் தவறும் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார். பரீட்சார்த்திகள் தங்களுக்குக் குறிக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சை எடுத்தல் வேண்டும். தமக்குக் குறிக்கப்பட்டதல்லாத பிறிதொரு நிலையத்தில் ஒரு பரீட்சார்த்தி பரீட்சை எடுப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

அனுமதிப் பத்திரங்களுடன் பரீட்சை நேரசூசி ஒன்றின் பிரதியும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சைத் தினத்தன்று தமது அனுமதிப் பத்திரத்தை மேற்பார்வையாளரிடம் கொடுத்துவிடல் வேண்டும்.

இவ்வறிவித்தலின் முடிவில் பரீட்சார்த்திகளின் விதிகள் வேறாக அச்சிடப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் இவ்விதிகளுக்குக் கட்டுப்பட்டவராவர்.

பரீட்சைத் தேதிக்குக் குறைந்தது ஏழு நாட்களுக்கு முன்னரேனும் ஒரு பரீட்சார்த்தி தமது அனுமதிப் பத்திரத்தைப் பெறுவிடின் அவர் உடனடியாகப் பரீட்சை ஆணையாளருடன் த. பெ. இல. 1503, கொழும்பு-2 (தந்தி முகவரி எக்சாமஸ், கொழும்பு) என்னும் முகவரிக்குக் கடிதத் தொடர்பு கொண்டு அனுமதிப் பத்திரத்தைத் தான் பெறவில்லையென அறிவித்துப் பின்வரும் தகவல்களையும் கொடுத்தல் வேண்டும்.—

(1) பரீட்சையின் பெயர் :————.

(2) முழுப் பெயர் :————.

(3) பரீட்சை ஸ்தானம் :————.

(4) அஞ்சல் அலுவலகமும் பதிவிலக்கமும் விண்ணப்பம் அனுப்பிய தேதியும் :————.

நேரடியான விசாரணைகளை அனுமதிப்பத்திரக் கிளை, 130 இரத்தினஜோதி சரவணமுத்து வீதி, கொழும்பு 2 என்ற விலாசத்திற் செய்து கொள்ளலாம்.

(ii) பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவது தகுதியுடைமையை ஒப்புக் கொண்டதாகாது. எனினும் பரீட்சை ஆணையாளர் தமது தற்றுணியின்படி பரீட்சார்த்தியொருவருக்கு இப்பரீட்சை எடுப்பதற்கு தற்காலிக அனுமதி அளிக்கலாம். அத்தகைய பரீட்சார்த்தித் தன்மை பின்னர் உறுதிப்படுத்தப்படும் அல்லது தள்ளுபடி செய்யப்படும்.

9. அடையாளச் சீட்டுக்கள்.—பரீட்சார்த்திகள் தாங்கள் எடுக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை மண்டபத்திலே மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் தங்கள் அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இந்நோக்கத்துக்காகப் பின்வரும் சாதனங்களிலொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) அஞ்சல் தலைமையதிபதி வழங்கிய அடையாளச் சீட்டு.

(ஆ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் வழங்கப்பட்டதும் வலிவுள்ளதுமான ஒரு கடவுச் சீட்டு (பாஸ்போட்).

(இ) இப்பரீட்சைத் தேதிக்கு முன் மூன்று ஆண்டுக்கு மேற்படாத காலத்தில் ஒரு அரசாங்கத் திணைக்களத்தின் அல்லது கூட்டுத்தாபனத்தின் அல்லது வேறு நியதிச் சட்டமுறையான தாபனம் ஒன்றின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும் வைத்திருப்பவரின் புகைப்படமொன்றைத் தன்னகத்தே கொண்டதுமான ஏதாவதோர் அத்தாட்சிப் பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாதனம்.

(ஈ) ஆட்கள் பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாள அட்டை.

(உ) கடவுச் சீட்டின் அளவுள்ள புகைப்படத்தின் பிற்பக்கத்தில், கையொப்பப்படிவத்தில் அத்தாட்சிப்படுத்தும் தகைமைபெற்ற ஒருவர் பின்வருமாறு அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

இதன் மறுபக்கத்தில் உள்ள புகைப்படம்,........................ (பரீட்சார்த்தியின் முழுப்பெயர்) உடையது என்றும், அவரது, கையொப்பம் கீழே கொடுக்கப்பட்டுள்ளதென்றும் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

.................................................

அத்தாட்சிப் படுத்துபவரின் கையொப்பம்
(பெயரும் நிலையும்)

.................................................

பரீட்சார்த்தியின் மாதிரிக் கையொப்பம்,

திகதி :————.

மேற்குறிப்பிடப்பட்ட சாதனங்களிலொன்றைக் காட்டத் தவறும் பரீட்சார்த்திகளினது பரீட்சார்த்தித் தன்மை தற்காலிகமானதாகப் பாவிக்கப்படும். பரீட்சை ஆணையாளரின் தற்றுணியின்படி அவ்வாறான பரீட்சார்த்தித் தன்மை நீக்கப்படலாம்.

10. தகுதிச் சாதனங்கள்.—(i) விண்ணப்பங்களுடன் எவ்விதச் சாதனங்களையும் வைத்தனுப்பக்கூடாது. தேவையான விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் கேட்டுள்ளவாறு கொடுத்தல் வேண்டும். பூரணமையற்ற விண்ணப்பங்கள் அவற்றில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் பரிசீலிக்கப்பட்டு, நிராகரிக்கவும் படலாம்.

(ii) தகைமைபெற்ற பரீட்சார்த்திகளிடமிருந்து தகுதிச் சாதனச் சான்றுகள் தேவைப்படும். அவ்வாறான பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டால், அச்சாதனங்களை அதற்கு காட்டல்வேண்டும் அல்லது பரீட்சை ஆணையாளரால் வேண்டப்படும் பொழுது அவை பதிவுத்தபால் மூலம் உடனே அனுப்பப்பட வேண்டும்.

(iii) பின்வரும் சாதனங்கள் தேவைப்படும் :

(அ) பொறுப்புள்ள ஒருவரால் கைச்சாத்திடப்பட்ட ஒரு நற்குண சான்றிதழ்.

குறிப்பு.—அரசாங்க அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலையொன்றில் படிக்கும் அல்லது அண்மைக் காலத்தில் பாடசாலையைவிட்டு நீங்கிய பரீட்சார்த்தி ஒருவர் அப் பாடசாலை அதிபரிடமிருந்து நற்குணசீலர் சான்றிதழ் பெறவேண்டும். மற்றவர்கள், ஒரு சமாதான நீதியரசர், வழக்குரைஞர், வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, வட்டார இறைவரி உத்தியோகத்தர், மாதமொன்றுக்கு ரூபா 4,800 அல்லது அதற்கு மேல் வேதனம் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர், நன்கு பிரசித்திபெற்றவரும் உடனடியாக விபரமறியப்படக்கூடியவருமான ஒருவர், போன்றவர்களிலொருவரிடமிருந்து நற்குணசீல சான்றிதழ் பெற்றவராக விருக்கவேண்டும். அச்சான்றிதழில், வழங்குபவரின் பெயர், பதவிப் பெயர், முகவரி முதலியன தெளிவாகக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் பரீட்சார்த்திகள் நற்குணசீலச் சான்றிதழ்களைக் காட்டவேண்டியதில்லை.

(ஆ) (i) பரீட்சார்த்தியின் பிறப்புப்பதிவேட்டின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியொன்று அல்லது (பிறப்பு பதியப்படாத பரீட்சார்த்திகளிடமிருந்து) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட வயதைக் குறிப்பிடும் விஷேட அத்தாட்சிப் பத்திரம் நேர்த்கவு வயதைக் குறிக்கும் அத்தாட்சிப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் பரீட்சார்த்திகளினது வயது, அவ்வத்தாட்சிப் பத்திரத்தில் காட்டப்பட்டிருக்கும் பிறந்தவாண்டின் ஜூலை 01 ஆந் திகதியென்றே கொள்ளப்படும்.

குறிப்பு.—(i) பாடசாலை தேர்வுக்காக அல்லது கல்வி சம்பந்தமாக வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ், பிறப்புப் பதிவேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்படும் பகுதிகளும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(ii) சத்தியக்கடதாசிகளும் ஞானஸ்நானப்பத்திரங்களும் பிறப்புச் சாட்சிப்பத்திரங்களுக்காக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(iii) பிறப்புச் சாட்சிப்பத்திரத்தில் காணப்படும் பெயர்/பெயர்கள் சாதாரணமாகப் பாவிக்கப்படும் பெயரில்/பெயர்களில் இருந்தும், இப்பரீட்சைக்குப் பரீட்சார்த்தி விண்ணப்பிக்கும் பெயரில்/பெயர்களில் இருந்தும் வேறுபட்டிருந்தால், பிறப்பு, இறப்புப் பதிவு கட்டளையின் 27, 28 ஆம் பிரிவுகளின்படி (பொருந்துமாப்போல்) நடவடிக்கையெடுத்து பிறப்புப் பதிவேட்டிலிருந்து பெயர் மாற்றம் செய்துகொள்ள வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவிகளில் ஈடுபட்டிருப்பவர்கள், 1957, ஆகஸ்ட், 18 ஆந் தேதிய 309 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெயர்மாற்றம் செய்திருந்தால், பிறப்புப் பதிவேட்டிலிருக்கும் பெயர் மாற்றம் செய்யப்படவேண்டியிராது.

(இ) இலங்கைப் பிரஜையாகப் பதிந்த சான்றிதழ் அல்லது (பொருந்துமிடத்து) பரம்பரை இலங்கைப் பிரஜை என்ற உரிமைக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள தற்குரிய அலுவலகக் கடிதத்தின் மூலப்பிரதி.

(ஈ) கல்வித் தகைமைகளின் மூலப் பிரதிகள்; கல்வித்தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டில்லாதவிடத்து, வேறு அலுவலக சாதனங்கள் (உ-ம். பிரத்தியேக பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் இலங்கை க. பொ. த. ப. (சாதாரணதர)த்தின் பெறுபேற்று அட்டவணை அல்லது பாடசாலைத் தலைவர்கள் வழங்கும் கடிதங்களின் மூலப் பிரதி).

(உ) ஐக்கிய இராச்சியத்தின் சேவையில் இலங்கையில் குடிசார் ஊழியராக ஈடுபட்டிருந்ததாகக் குறிப்பிடும் சேவைச் சான்றிதழின் மூலப்பிரதி அல்லது பந்தி 6 (ஆ) வில் குறிப்பிட்டுள்ளவாறு ஆயுதந்தாங்கிய படைகளில் சேவைச்சான்றிதழ்.

(ஊ) பந்தி 6 (ஆ) வில் குறிப்பிட்டுள்ளவாறு அரசாங்கத்தின் கீழ் சேவை செய்த சான்றிதழின் மூலப்பிரதி.

(எ) அடையாள அட்டை (வாய்மொழிப் பரீட்சை நடத்தப்பட்டால்).

(iv) பரீட்சார்த்திகள் தேவையான சகல சாதனங்களையும் விண்ணப்பம் அனுப்பும் பொழுதே தயாராக வைத்திருக்கும்படி எச்சரிக்கை செய்யப்படுகிறார்கள். இச்சாதனங்கள் ஒரு பரீட்சார்த்தியால் வாய் மொழிப் பரீட்சை நடத்தப்பட்டால், அதில் வைத்துக் காட்டப்படாவிட்டால் அல்லது பரீட்சை ஆணையாளரால் வேண்டப்படும் பொழுது காலதாமதமின்றி அவை அனுப்பப்படாவிட்டால், அவரது பரீட்சார்த்தித்தன்மை நிராகரிக்கப்படும்.

11. பொய்யான விபரங்கள் கொடுப்போருக்குரிய அபராதம்.—இப்பரீட்சைக்குரிய பிரமாணங்களின்படி பரீட்சார்த்தியொருவர் தகுதியில்லாதவர் எனக் காணப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்போதோ, பரீட்சைக்குப் பின்னரோ எந்நிலையிலாவது அவரது பரீட்சார்த்தித்தன்மை நீக்கப்படுவதற்கு ஏதுவாகும்.

பரீட்சார்த்தியொருவர் கொடுத்துள்ள விபரங்களில் எவையேனும் அவருடைய அறிவிற்குட்பட்ட பொய்யானவையெனக் காணப்பட்டால் அல்லது அவர் வேண்டுமென்றே முக்கியமான உண்மையெதையும் மறைத்திருந்தால், அல்லது இப்பரீட்சைக்குத் தோற்றத்தகைமையற்றவர் என்று அவர் சேவைக்காலத்தில் எப்பொழுதாவது காணப்பட்டால் அவர் அரசாங்க சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவர்.

12. பரீட்சைக் கட்டண மீளளிப்பு.—எக்காரணங்கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. இப்பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட கட்டணங்கள் வேறொரு பரீட்சைக்காக மாற்றப்பட முடியாது.

13. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்கு லீவு.—பரீட்சை ஆணையாளரால் விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குச் சமுகமளிப்பதற்கு லீவு வழங்குமாறு (கடமை லீவு அல்ல) திணைக்களத் தலைவர்கள் வேண்டப்படுகிறார்கள்.

14. பரீட்சைத் திட்டம்.—இரண்டு பாகமாக இப்பரீட்சை நடாத்தப்படும்; அவையாவன.—பாகம் I எழுத்து, பாகம் II வாய்மொழி பரீட்சையின் பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குமுரிய புள்ளிகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. எழுதும் பாடங்களில், கூடாவெழுத்துக்கும், எழுத்துப் பிழைகளுக்கும் புள்ளிகள் குறைக்கப்படும். தெளிவற்ற கையெழுத்தையுடைய பரீட்சார்த்திகள் தகைமை நீக்கம் செய்யப்படுதற்கு ஆளாவர்.

பாகம் I

| | புள்ளிகள் |
|---|---|
| 1. தட்டெழுதுதல் (நிமிடத்துக்கு 20 சொற்கெதியில் 20 நிமிடங்களுக்கு) | 150 |
| 2. பொது அறிவு (30 நிமிடங்களுக்கு) | 50 |

குறிப்பு

(i) பரீட்சார்த்திகள் தமது சொந்த தட்டச்சுப்பொறிகளை பரீட்சை தினத்தன்று கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(ii) அவ்வாறு செய்யமுடியாத பரீட்சார்த்தி தத்தமக்கிடையே தட்டச்சுப் பொறிகளை பரிமாற்றம் செய்துகொள்ள ஒழுங்குசெய்து கொள்ளலாம். ஒரு தட்டச்சுப் பொறியைப் பாவிப்போர் தொகை ஒரு நாளைக்கு நான்கிற்கதிகமாகக் கூடாது. தட்டச்சுப் பொறிகளை பரிமாற்றம் செய்து கொள்ளவிருக்கும் பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட ஆக முந்திய தினத்தில் பரீட்சை மேற்பார்வையாளருக்கு பரீட்சை ஆரம்பமாகுமுன் அறிவிக்க வேண்டும். பரீட்சார்த்திகளுக்குத் தனித்தனி கொடுக்கப்பட்டுள்ள பரீட்சை தினமென்ற நியதியின்றி, மேற்பார்வையாளர் அவர்களெல்லோருக்கும் ஒரு தினத்தில் பரீட்சை நடத்த ஒழுங்குசெய்வார். பரீட்சார்த்திகளுக்கு இவ்வொழுங்குபற்றி வேறு அறிவித்தல்கள் கொடுக்கப்படமாட்டா.

(iii) 1973 யூன் 25 ஆந் திகதியன்று தமது நியமனத்தில் உறுதிப்படுத்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்கள், தட்டச்சுப் பொறிகளைப் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்ப்பார்கள் என்றும் பழுதேற்பட்டால் அது திருத்திக் கொடுக்கப்படும் என்றும் எழுத்துமூலம் கொடுக்கப்படும் உறுதியுரையின் பேரில் திணைக்களத் தலைவர்கள் அலுவலகத் தட்டச்சுப் பொறிகளை பரீட்டை நிலையங்களுக்கு எடுத்துச் செல்ல அனுமதிப்பார்கள்.

(iv) மேலேயுள்ள பந்தி (II) இன் பட்டியல்லாது தட்டச்சுப் பரீட்சைக்குக் கொடுக்கப்படும் தினங்களில் மாற்றம் கேட்கும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(v) பரீட்சை மண்டபத்தில் பரீட்சை ஆணையாளரால் தட்டச்சுப் பொறிகள் வழங்கப்பட்மாட்டா.

(vi) தட்டச்சுப் பரீட்சையில் புள்ளிவழங்கும்போது துப்புரவு, செம்மை, வேகம் ஆதியன கவனத்திற்கெடுத்துக்கொள்ளப்படும்.

பாகம் II

| | புள்ளிகள் |
|---|---|
| வாய்மொழிப் பரீட்சை | 50 |

எழுத்துப் பரீட்சையின் பிறகு. அதன் பெறுபேறுகளின் பிரகாரம், பரீட்சார்த்திகள் வாய்மொழிப் பரீட்சைக்குத் தோற்றுதற்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கொழும்பில் நடாத்தப்படும் வாய்மொழிப் பரீட்சைக்குரிய திகதி பிறகு அறிவிக்கப்படும். பரீட்சை ஆணையாளரின் ஆலோசனையின் பேரில், வாய்மொழிப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுப்போரின் தொகை அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகத்தினுல் நிர்ணயிக்கப்படும். வெற்றிடங்களின் எண்ணிக்கைக்குக் குறைவாகவே பரீட்சை முடிவில் தகைமை பெறும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை இருக்குமெனின் வாய்மொழிப் பரீட்சை நடத்தப்படமாட்டாது.

15. **பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படலும் நியமனங்களும்.**—தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுவதுடன், தகுதியான வெற்றிடங்கள் ஏற்படும்பொழுது நியமனங்கள் வழங்கப்படும்.

16. **வைத்தியப் பரிசோதனை.**—இத்தீவின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடிய தேகாரோக்கியமுள்ளவரென்று சான்றுபடுத்தக்கூடியதொரு வைத்தியப் பரிசோதனைக்கு உட்படும்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வேண்டப்படுவர்.

17. இவ்வொழுங்கு விதிகளின் ஏற்பாடுகளிலமையாத வேறு விடயங்கள் அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப்படும்.

ஆர். எம். பி. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
இணைந்த சேவைகள் பகுதி,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973, மே 31 ந் திகதி.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

பரீட்சைத் திணைக்களம்

சுட்டிலக்கம் :
(அலுவலக உபயோகத்திற்காக மாத்திரம்)

**தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காய (தமிழ்) பரீட்சை—ஓகஸ்ட், 1973**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
   பால் :————.

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :————.

3. முழு அஞ்சல் முகவரி :————.
   (அரசாங்க சேவையிலுள்ளவராயின் அலுவலக முகவரி)

4. வம்சாவழி மூலமாகவா, பதிவு மூலமாகவா நீர் இலங்கைப் பிரஜை என்பதைக் குறிப்பிடுக :————.

5. பரீட்சார்த்தி விரும்பும் பரீட்சை ஸ்தானம் :————.
   முதல் விருப்பு :————.
   இரண்டாம் விருப்பு :————.

6. தகுதி : (அ) அறிவித்தலின் எப்பந்தியின் பிரகாரம் இப்பரீட்சைக்குத் தோற்றத் தகைமை பெற்றுள்ளீர் என்பதைக் குறிப்பிடுக :————.
   (ஆ) பிறந்த திகதி :————.
   (இ) கல்வித் திகைமைகள்—
      (i) பரீட்சையின் பெயரும், வருடமும் மாதமும் :————.
      (ii) பரீட்சை ஸ்தானமும் சுட்டிலக்கமும் :————.
      (iii) சித்தியெய்திய பாடாங்கள் :————. (எடுத்துள்ள ஒவ்வொரு பரீட்சையின் விபரமும், திறமைச் சித்திகளையும் குறிப்பிட வேண்டும்).
   (ஈ) இப்பரீட்சைக்குத் தோற்ற நீர் பெற்றுள்ள வேறு தகுதிகள் :————.

7. அரசாங்க சேவை உட்பட முன்னர் செய்தவேலைகளும், அவற்றின் சேவைக் காலமும் விலகியதற்குரிய காரணங்களும்—
   (i) வர்த்தக நிறுவனத்தின்/வேலைகொள்வோரின்/அரசாங்க திணைக்களத்தின் பெயர் :————.
   (ii) வேலையின் தன்மை :————.
   (iii) சேவைக் காலம் :————.
   (iv) வேலையை விட்டு விலகியதற்குரிய காரணங்கள் :————.

8. எச்சந்தர்ப்பத்திலாவது, எக்குற்றத்திற்காவது நீர் குற்றவாளி ஆக்கப்பட்டுள்ளீரா அல்லது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளீரா அல்லது உமக்கு அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதா என்பதைக் குறிப்பிடுக :————.

9. (i) மேலே தட்டப்பட்டுள்ள விபரங்கள் யாவும் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மையானவை என்றும், ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் முன்பு உபயோகிக்கப்படாதவையும் சட்டப் பெறுமதியானவையும் என்று இத்தால் சத்தியம் செய்து உறுதிப்படுத்துகிறேன்.
   (ii) இப்பரீட்சைக்குரிய சட்டவிதிகளுக்கமைந்து நடக்க உடன்படுகிறேன்.

10. முத்திரைகளுக்கான கூடு : (**முக்கியம்.**—பரீட்சார்த்தி இங்கு 40 ரூபா பெறுமதியான முத்திரைகளை ஒட்டி, அவற்றின் மீது தமது கையொப்பத்தையும் தேதியையும் இட்டு, அவற்றைச் செல்லுபடியாகாதனவாகச் செய்தல் வேண்டும். முத்திரைகளை ஒன்றன்மீதொன்றாக ஒட்டுதலாகாது. அரச சேவைகளில் நிரந்தர இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைய உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் 20 ரூபா பெறுமதியான முத்திரைகளைக் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றைத் தன் கையொப்பத்தாலும் திகதியாலும் செல்லுபடியாகாமற் செய்தல்வேண்டும். ஆயின் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடைமையற்ற அரச சேவை உத்தியோகத்தர் 40 ரூபா பெறுமதியான முத்திரைகள் ஒட்டுதல் வேண்டும்.

| |
|---|
| ரூபா 40/- <br> ரூபா 20/- |

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

தேதி :————.

11. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல்.

* நான் ........................................ என்பவர் எனது அலுவலகத்தில் ஓர் உத்தியோகத்தர்/எனக்கு நன்றாகத் தெரிந்தவர் என்றும் அவர் தமது கையொப்பத்தை 1973 ஆம் ஆண்டு ...........மாதம் ........... திகதி என்முன்னிலையில் இட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

————,
அத்தாட்சிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர், பதவி, நிலை முதலியன :————.

விலாசம் :————.

* தற்பொழுது அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பகாரரொருவரின் கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்தல், அவரின் திணைக்களத் தலைவரினுல் அல்லது அவ்வாறு செய்வதற்கு அதிகாரம் கையளிக்கப்பெற்ற ஓர் உத்தியோகத்தரால் செய்யப்படுதல் வேண்டும்.

### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும்பொழுதும் வெளியேறும்பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறுக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினுத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர் ; செய்கைமுறை அல்லது வாய் மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினுத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக் கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறி விடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினுவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல விடயங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறுக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினுக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அழகிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப் பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ, கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகுசெய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசிமட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள், முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம் வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடவேண்டும். இந் நிபந்தனைகளை மீறினுல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்பட மாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களிலும் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுது மீண்டும் வரும்பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவும் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக் கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

**பரீட்சார்த்திகளுக்கு**

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதியைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக் கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்கு தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்திற்குத் தோற்றும்பொழுது இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதற்காக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத் தாள், பேரேட்டுத் தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்கவேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது, மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசை மேல் விட்டுவிட வேண்டும். சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர் வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(v) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்பரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்படவேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றேடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vi) உமக்கு கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களை இடுக.

(vii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள். கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும், பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(viii) ஒவ்வொரு படத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலது பக்க மேல்மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(ix) வினப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினக்கள் தெரிவுக்குரிய வினக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(x) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணமல் போய் இப் பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xi) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சை பகுதி,
மலே வீதி, கொழும்பு-2.

6-385—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63

---

### அளவையியலிலும் மட்டமாக்கலிலும் பரீட்சை

நில அளவையாளர் நாயகத்தின் உத்தரவுப்பத்திரம் வழங்குவதற்கான நில அளவையும் மட்டமாக்கலிலும் சம்பந்தமான வருடாந்தப் பரீட்சை எழுத்து, செய்முறை ஆகிய இரு பகுதிகளிலும் நடாத்தப்படும். எழுத்துப் பரீட்சை 1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் திகதியும் செய்முறைப் பரீட்சை 1973 ம் ஆண்டு ஆகஸ்து மாதம் 14 ம் திகதியும் ஆரம்பமாகும்.

2. எழுத்துப் பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும். செய்முறைப் பரீட்சை கொழும்பு மாவட்டத்தின் எப்பகுதியிலாவது நடாத்தப்படும்.

3. (அ) இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு, பிரமாணங்களுக்கு அமைய விதித்த விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். இவ் விண்ணப்பப்பத்திரங்களைக் கொழும்பு 5, கிருல வீதியில் உள்ள நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(ஆ) விண்ணப்பத்துடன் கீழ்வரும் சான்றிதழ்களின் மூலங்கள் இணைக்கப்படல் வேண்டும் :—

(1) கணிதசாஸ்திரத்துடன் (Mathematics) சித்தியெய்திய சிரேஷ்ட தராதரப் பத்திரம் (ஆங்கிலம்) பரீட்சையின் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான சான்றிதழ் அல்லது அதற்கு உயர்தரமான பரீட்சையில் சித்தியெய்தியமைக்குரிய சான்றிதழ்.

(2) இலங்கை நுண்தொழில் நுட்பக் கல்லூரியில் அல்லது முறையாக உத்தரவுப் பத்திரம் பெற்ற நில அளவையாளர் அல்லது மட்டமிடுபவர் அல்லது நில அளவையாளரும் மட்டமிடுபவரிடம் நில அளவையில் அல்லது மட்டமாக்கலில் அல்லது நில அளவையிலும் மட்டமாக்கல்களிலும் பரீட்சைக்கு முன் ஆகக் குறைந்தது ஓராண்டாவது பரீட்சார்த்தி கற்றதாகக் கூறும் சான்றிதழ்.

குறிப்பு :—கணித சாஸ்திரம், ஆங்கிலம், சிங்களம்/தமிழ் உட்பட வேறும் மூன்று பாடங்களுடன், இரு தருணங்களுக்கு மேபடாத பரீட்சைகளில் சித்தியெய்திய, பொதுக் கல்வி தராதரப் பத்திரம் (சாதாரண நிலை) சிரேஷ்ட தராதரப் (ஆங்கிலம்) பத்திரத்துக்குச் சமமாகக் கருதப்படும்.

4. பரீட்சார்த்திகள் விண்ணப்பம் ஏற்கும் முடிவு தேதிக்கு முன்பு அதாவது 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ம் திகதிக்கு முன்பதாக கீழ்க்காணும் பரீட்சைக் கட்டணங்களை நில அளவையாளர் நாயகமவர்களிடம் செலுத்தல் வேண்டும் :—

| | ரூபா |
|---|---|
| நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் ... | ... 30 |
| மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் ... | ... 30 |
| நில அளவையும் மட்டமாக்கலும் பரீட்சைக்கு | ... 50 |

5. எழுத்துப் பரீட்சைக்குரிய பாடங்கள் பின்வருமாறு :—

(அ) ஆங்கிலம்—ஒரு கேள்வித்தாள்—பரீட்சார்த்தியின் ஆங்கில அறிவையும் ஆதிக்கத்தையும் அளவிடுதற்கான கேள்விகளிலும் கட்டுரையிலும் பயிற்சி.

(ஆ) எண் கணிதமும் அட்சரகணிதமும்—ஒரு கேள்வித்தாள்.
எண்கணிதம்—முழு இலக்கங்களுக்கும் பொதுப் பின்னங்களுக்கும் தசமப் பின்னங்களுக்கும் பயன்படும் எண்கணிதத்தின் தத்துவங்களும் செய்முறையும், மீற்றர் அளவு முறை. குறிக்கப்பட்ட திருத்தத்தின் அளவுக்குக் கிட்டத் தட்டச் சரியாக்கல். தசமல்களினதும் விகிதங்கள், விகிதசமன்களினதும் பெருக்கல் பிரித்தற் சுருக்க முறைகள். நூற்றுவீதம், சராசரிகள், எண்கணிதத்தின் செய்முறை பிரயோகம்.

அட்சரகணிதம்—எண்கணித அட்சர கணித விதிகளது பொது முடிவுகளின் குறியீட்டுக் கோலேயும் அவற்றின் பிரயோகமும். எளிய, ஈருறுப்பு, இருபடிக்கோலேகளின் காரணிகள் (மூலக்கூறுகள்). முதற்படி அல்லது இரண்டாம்படிச் சமன்பாடுகளும் அவற்றுக்கு வழிகாட்டும் பிரச்சினேகளும், வர்க்கமூலம், எளிய விகித முறுகின்ற முழு வெண்ணுக்குரிய அட்சரகணிதச் செயற்கூறுகளே காட்டும் வரைபுகள். கூட்டல் விருத்தியும் இசையிடை விருத்தியும். பெருக்கல் விருத்தி. சுட்டிகளினதும் மடக்கைகளினதும் அறிமுறையும் மடக்கை வாய்ப்பாட்டுப் பயன்பாடும். ஒரு நேரான முழு வெண்ணுக்குரிய சுட்டியின் ஈருறுப்பு அறிமுறை.

(இ) கேத்திர கணிதமும் திரிகோண கணிதமும்—ஒரு கேள்வித்தாள். கேத்திர கணிதம்—ஒப்பிடத்தக்க நீளம் கொடுக்கப்பட்டுள்ள அடித்தளங்களேயும் குறுதுயரங்களேயும் கொண்ட முக்கோணங்களினதும் இணைகரங்களினதும் பரப்புகளேயும் இலகுவான ஒழுக்குகளேயும் சேர்த்து எளிய உய்த்தறிதல்களே விளக்கும் ஊக்கிளிட் ((i)—(iv)) இன் பாடங்கள். (கேத்திர கணிதத்தேற்றங்களுக்குரிய எல்லா நிறுவல்களும் கேத்திரகணிதச் சார்பானதாயிருக்க வேண்டும். ஊக்கிளிட்டினுடைய நிறுவல்கள் வற்புறுத்தப்படமாட்டா). இயல்பொத்த உருவங்கள், வட்டத்தின் அளவியல், கனம், நீள்சதுரக்கண்டம், நான்முகி, கோளம், உருளே, ஆப்பு, கூம்பகம், கூம்பு எனப்படும் எளிய திண்டி உடல்களின் அளவியல்.

திரிகோணகணிதம்—முக்கோணங்களின் தீர்வும் அது வரையுள்ள பகுதியும் (முக்கோணங்களின் செய்முறைத் தீர்வுகளேயும் அவற்றின் பிரயோகங்களேயும் சேர்த்து). மடக்கை வாய்ப்பாட்டினதும் பிறவாய்பாடுகளினதும் பிரயோகத்தை உள்ளடக்கும் எண்ணுதாரணங்கள்.

(ஈ) அளவையியல்—ஒரு கேள்வித்தாள்—சங்கிலியளவை.
திருன்சிற்தியொடயிற்களும் கிறேடிள் தியொடவியற்களும், அவற்றின் பிரயோகமும், அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும் தளச்செவ்கோண ஆனகூறுகள், வளே கோட்டு வீச்சீடு, எதிரமைமுறைகள் தக்கியோகமானம் முதலியவற்றின் பயன்களேயும் காட்டும் தியொடலபிற் போகுகளும் திசைகாட்டிப் போகுகளும். தளமேசை அளவை. தனமுக்கோணவாக்கம். வானியல் நோக்கல்களினுல் திசைவில்லேக் கணித்தல்.

(உ) மட்டமாக்கலியல்—ஒரு கேள்வித்தாள்.
டம்பி மட்டமும், "Y" மட்டமும் குக்கின்பின் திருப்பும் மட்டமும் அவற்றின் பிரயோகமும் அவற்றைச் சீர்ப்படுத்தும் முறைகளும். மட்டமாக்கலின் அறிமுறையும் செய்முறையும். மண்வேலேயைக் கணித்தல். புகையிரதப்பாதை அளவைகளும் தெரு அளவைகளும், அவற்றைத் தரையிற் குறித்தலும். நீர் விநியோகத்திற்கான அளவைகள். உரு வரைகளும், அவற்றிலிருந்து, அவற்ருல் அடக்கப்பட்ட பகுதிகளேக் கணிப்புச் செய்தலும்.

கேள்வித்தாள்கள் (அ), (ஆ), (இ) களில் தேர்ச்சியடைவதற்குரிய புள்ளிகளின் நூற்று வீதம் ஒவ்வொரு பாடத்திற்கும் 40 ம், மொத்தச் சராசரி 50 ம் ஆகும். (ஈ), (உ) ம் கேள்வித்தாள்களில் தேர்ச்சியடைவதற்கு 60 வீதம் புள்ளிகள் பெறல் வேண்டும்.

6. நில அளவைப் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (ஈ) வரையுள்ள பாடங்களில் சித்தியெய்த வேண்டும். மட்டமாக்கல் பரீட்சைக்கு மட்டும் தோற்றும் பரீட்சார்த்திகள் (அ) தொடக்கம் (இ) வரையுள்ள பாடங்களிலும் (உ) விலும் சித்தியெய்தல் வேண்டும்.

7. எழுத்துப் பரீட்சையில் சித்திபெருத பரீட்சார்த்திகள் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைக்கப்படமாட்டார்கள்.

8. எழுத்துப் பரீட்சையில் சித்யெய்திய பரீட்சார்த்திகட்கு செய்முறைப் பரீட்சைக்கான நேரமும் இடமும் உரிய காலத்தில் அறிவிக்கப்படும். இப்பரீட்சை எழுத்துப் பரீட்சையின் நில அளவையினதும் மட்டமாக்கலினதும் பாடத்திட்டங்களுக்கமைய நடைபெறும்.

9. பரீட்சார்த்திகள், பரீட்சகர் குறிக்கும் நேரங்களுள் வெளிக்கள வேலேகள் செய்வதோடு சீரான நிலேயில் உள்ள உபகரணங்களேயும் கொண்டு வருதல் வேண்டும். திருப்தியற்ற வேலேகட்குச் சீரற்ற உபகரணங்களே ஒரு காரணமாகக் கொள்ள முடியாது. பரீட்சை நேரத்தில் எவருடனுவது தொடர்பு கொள்ளக் காணப்படும் பரீட்சார்த்திகளின் தகைமை நீக்கப்படும்.

10. எல்லாப் பரீட்சார்த்திகளும் தங்கள் சொந்த உபகரணங்கள், கம்பங்கள், முனேகள், வரைதற் பலகைகள், வரைதற் பொருட்கள், எழுது கருவிவகை ஆகியனவற்றையும் தொழிலாளர்களேயும் கொண்டு வருதல் வேண்டும். எழுத்துப் பரீட்சைக்கோ அல்லது செய்முறைப் பரீட்சைக்கோ எதுவிதத்திலும் உதவி அளிக்கப்படமாட்டாது.

11. 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 26 ந் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

12. (அ) சகல பரீட்சார்த்திகளும் எழுத்து, செய்முறை ஆகிய பரீட்சைகளில் ஒவ்வொரு பாடமும் பரீட்சிக்கப்படுவதற்கு முன்பு மேற்பார்வையாளர் திருப்திப்படுமாறு தமது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காகக் கீழ்கொடுக்கப்படும் ஏதாவதொரு சாசனம் அங்கீகரிக்கப்படும் :—

(1) தபாற் கந்தோர்களின் தலேமை அதிபதியால் வழங்கப்படும் அடையாள அட்டை,

(2) இப்பரீட்சைத் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்கு உட்பட்ட காலத்தில் வழங்கப்பட்டதும் செல்லுபடியாகக் கூடியதுமான ஒரு பிரயாண அனுமதிச் சாசனம் (பாஸ்போட்),

(3) இப்பரீட்சை நிகழும் திகதிக்கு முன் மூன்று வருடத்திற்குள் ஓர் அரசாங்கப் பகுதியின் அதிகாரத்தோடு வழங்கப்பட்டதும், அதற்குரியவரது புகைப்படத்தைக் கொண்டதுமான ஏதாவதொரு அத்தாட்சிப்பத்திரம் அல்லது உத்தரவுப் பத்திரம் அல்லது பிற சாசனம்.

(ஆ) மேற் குறிக்கப்பட்ட (அ) வில் பந்தியில் குறிப்பிட்ட எந்த ஒரு சாசனம் மூலமாவது தமது அடையாளத்தை நிரூபிக்கத்தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் அவர் தோற்றும் எழுத்து, செய்முறை பரீட்சையில் ஒரு பாடத்திலாவது பரீட்சிக்கப்படுவதற்குத் தகுதியற்றவராவர்.

13. (அ) எக்காரணங்கொண்டும் கட்டுப்பணம் திருப்பிக்கொடுபட மாட்டாது.

(ஆ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டி பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலே 2.7.1973 ல் அல்லது அதற்கு முன்னர் இக்காரியாலயத்துக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல், அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குக் கட்டுப்பணமின்றித் தோற்ற அனுமதியளிக்கப்படுவர்.

(இ) பரீட்சார்த்திகள் தகுந்த காரணத்தைக்காட்டியோ, அல்லது சுகவீன காரணத்தாலோ (வைத்திய அத்தாட்சிப்பத்திரத்தால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்) பரீட்சையிலிருந்து விலகுவதான அறிவித்தலே 2.7.1973 ற்குப் பின்பும் பரீட்சை ஆரம்பத் திகதிக்கு முன்பும் இக்காரியாலயத்திற்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பினுல் கட்டுப்பணத்தின் அரைப்பங்கைக் கட்டி அடுத்து நடைபெறவிருக்கும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படுவர்.

(ஈ) பரீட்சார்த்தியின் கட்டுப்பணம் சம்பந்தமாக (ஆ), (இ) வில் குறிப்பிட்டுள்ள சலுகைகள் தவறினுல் அல்லது பரீட்சைக்குத் தோற்ற முடியாத காரணத்தைப்பற்றிய அறிவித்தலேப் பரீட்சை ஆரம்பத்திற்கு முன் அறியத்தராமலிருந்தால் அவர்களின் கட்டுப்பணம் திருப்பிக்கொடுபடமாட்டாது.

14. இது சம்பந்தமான சகல தொடர்புகளும் நில அளவையாளர் நாயகத்துக்கே விலாசமிடப்பட வேண்டும் ; எனக்குத் தனிப்பட்ட முறையில் அல்ல.

ஆர். ஏ. குணவர்தன,
பதில் நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணேக்களம்,
கிளே, " புறேக்/சீஈ.",
கிருல வீதி,
த. பெ. எண் 506,
கொழும்பு 5,
1973 ம் ஆண்டு மே மீ 18 ந் உ.

6–183—08.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 63.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **யூன்** | .. 1.6.73 | வெள்ளி | .. | 23.5.73 | புதன் | .. | ந.ப. | 12.00 |
| | 8.6.73 | வெள்ளி | .. | 30.5.73 | புதன் | .. | ந.ப. | 12.00 |
| | 14.6.73 | வியாழன் | .. | 6.6.73 | புதன் | .. | ந.ப. | 12.00 |
| | 22.6.73 | வெள்ளி | .. | 13.6.73 | புதன் | .. | ந.ப. | 12.00 |
| | 29.6.73 | வெள்ளி | | 20.6.73 | புதன் | .. | ந.ப. | 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
**1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந உ.**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.